# பாட்டாளி சிந்தனை

Volume 34 No 2

October 2023

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


# தோழர் சிப்தாஸ் கோஷ் தோற்றுவித்த கட்சி, இந்நாட்டின் சுரண்டப்படும் ஏழை மக்களாகிய உங்களுக்குச் சொந்தமானது. இதைப் பாதுகாத்து வளர்த்து வலிமைப்படுத்துவீர்!

## தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் பிரவாஸ் கோஷ் அறைகூவல்!



**தோழர் பிரவாஸ் கோஷ், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர்**

**(ஆகஸ்ட் 5, 2023 பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவு விழாவில் தோழர் பிரவாஸ் கோஷ் ஆற்றிய சிறப்புரையின் சுருக்கம் – பாட்டாளி சிந்தனை, தொகுதி 34, இதழ் 1 இன் தொடர்ச்சி)**

### இரட்டை இஞ்சின் பாஜக அரசாங்கத்தால் கோடிக்கணக்கான ஏழை மக்கள் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்

நாட்டில் நிலவும் மோசமான சூழ்நிலைகளுக்கு நீங்கள் எல்லோரும் பலியாகி வருகின்றீர்கள். இன்றைய தினம் சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இருள் கவ்வி வருகின்றது. பொருளாதாரம் அரசியல் அறநெறி கலாச்சாரம் சமூகம் என எங்கும் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்று காணவில்லை. நாட்டின் பிரதமர் ஏழை மக்களை காப்பாற்ற வந்த தேவதூதர் என்று சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சர் கூறினார். உலக வறுமை குறியீட்டில் இருக்கும் 121 நாடுகளில் 107வது இடத்தில் இந்தியா இருக்கின்றது. இவர் எப்படிப்பட்ட ஏழைகளின் தேவதூதர் என்று பாருங்கள்! பட்டினியின் வேதனையை தாங்க இயலாமலும் வாங்கிய கடனை கட்ட முடியாமலும் 2021ஆம் ஆண்டு மட்டுமே 1,64,033 இந்தியர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரே ஆண்டிலே இத்தனை பேர்! தினந்தோறும் 4,500 குழந்தைகள் பட்டினியால் மடிகின்றதாக அதிகாரப் பூர்வமான அறிக்கைகள் கூறுகின்றன. உண்மையில் இந்த எண்ணிக்கை பலமடங்கு இருக்கும். மூன்று வருடங்களுக்கு முன்பு நடுத்தர வர்க்க மக்கள் தொகை ஒன்பது கோடி 90 லட்சம் என இருந்தது. தற்போது அந்த எண்ணிக்கை 6 கோடி 60 லட்சம். ஆக, மூன்று கோடியே 30 லட்சம் மக்கள் புதிதாக ஏழைகள் ஆகிவிட்டனர். அதேசமயம் பாஜகவின் நெருங்கிய நண்பர், தொழிலதிபர் முகேஷ் அம்பானி ஓர் ஆண்டுக்கு 197.8 கோடி சம்பாதிக்கின்றார். ஆனால் நாட்டில் 68% மக்கள் தினமும் ரூபாய் 146 சம்பாதிக்கின்றனர். இந்த மக்களின் தினசரி வருமானம் ரூபாய் 83 மட்டுமே. ஏழை மக்களின் காப்பாளன் திரு மோடி தொழிலதிபர்களுக்கு மட்டும் கடந்த 9 ஆண்டுகளாக 55 லட்சம் கோடி ரூபாய் வரிச்சலுகை செய்திருக்கின்றார். இந்த ஆண்டு மட்டுமே மிகப்பெரிய வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வாராக்கடனில் 60% தள்ளுபடி செய்து இருக்கின்றது. ஆனால் கடனில் சிக்கியுள்ள சாமானிய மக்கள் கடன் கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர். மேலும் காட்டுத்தீ போல் உயரும் விலைவாசி சாமானிய மக்களை பொசுக்கி தள்ளிக் கொண்டிருக்கின்றது. இந்தியர்களுக்கு ஏழைகளின் காப்பாளன் வழங்கியுள்ள பரிசு இது தான் ஆகும்.

பாஜக பிரதமர் இரட்டை இஞ்சின் அரசாங்கம் இருப்பதாகப் பெருமை பேசுகிறார். ஆம் இரட்டை எஞ்சின்தான். இந்த இன்ஜின்களை இயக்குவது பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் ஆகும். இரயில் பெட்டிகளில் சொகுசாக அமர்ந்து பயணிப்பவர்கள் அம்பானி, அதானி, டாட்டா, பிர்லா, மிட்டல், ஜின்டால் மற்றும் மிகப்பெரிய பன்னாட்டு முதலாளிகளாகும். இந்தியாவின் ஏழை விவசாயிகள் நடுத்தர மக்கள் எஞ்சின் சக்கரங்களுக்குக் கீழ் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் செல்வத்தில் 60%ஐ வெறும் 5% பணக்கார இந்தியர்களே வைத்திருக்கின்றனர். செல்வத்தின் 3% மட்டுமே மக்கள் தொகையில் 50% ஏழை மக்கள் வைத்திருக் கின்றனர். 2022 வரை 7,24,000 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பலகோடி தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். உலக முதலாளித்துவம் கடும் சந்தை நெருக்கடியை சந்தித்துக் கொண்டி ருக்கின்றது. ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளிலேயே பணி நீக்கம் வேலையின்மை மற்றும் அரைகுறை வேலை போன்றவை இருந்து கொண்டிருக்கின்றது. இதனால் மக்களின்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## கட்டண உயர்வு, ஸ்மார்ட் மீட்டர், பொதுப் பயன்பாட்டு கட்டண உயர்வு, ஆட்குறைப்பு என

# தமிழக மின்வாரியத்தின் தொடர் அதிரடித் தாக்குதல்களை மக்கள் போராட்டத்தால் முறியடிக்க வேண்டும்

நிதிச் சுமையால் பாதிப்புள்ளாகிய மாநிலங் களுக்கு கடனுதவி அளிப்பதாகக் கூறும் மத்திய அரசின் உதய் திட்டத்தில் கடந்த அதிமுக ஆட்சியில் தமிழ்நாடு கையெழுத்திட்டது. ஓரளவு சுயேட்சையாக மின் உற்பத்தியையும் பகிர்மானத்தையும் கட்டண நிர்ணயத்தையும் நிர்வகித்து வந்த மாநில அரசாங்கம், இதன் மூலம் மத்திய அரசாங்கத் திட்டத்திற்கு சரணாகதி அடைந்தது. அதேபோன்று, மத்திய அரசாங்கத்தின் மின்சார மசோதாவையும் உதய் திட்டத்தையும் அப்பொழுது எதிர்த்த திமுக, தற்போது உதய் திட்டத்தை முழுமையாக அமலாக்கம் செய்து வருகிறது.

### ஆண்டுதோறும் கட்டண உயர்வு

உதய் திட்டத்தின் படி தமிழ்நாட்டிற்கு வழங்கப்படும் மானியத்தைப் பெற வேண்டு மானால் மாநில அரசாங்கம் ஆண்டு தோறும் மின்சாரக் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டும். அதேபோல, வணிக ரீதியில் செயல்படும் வங்கிகள் மாநில அரசின் மின் பகிர்மான நிறுவனங்களுக்கு கடன் கொடுக்கும்போது, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30ஆம் தேதிக்குள், பணவீக்கத்திற்கு ஏற்றாற்போல் மின் கட்டணத்தைத் திருத்தியதற்கான அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கியுள்ளது.

இதனால் 8 ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற ஆண்டு 2022 செப்டம்பரில் திமுக அரசாங்கம் 52% மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியது மீண்டும் இவ்வாண்டு ஜூலையில் 6%க்குப் பதிலாக 2.18% கட்டணத்தை உயர்த்தியுள்ளது. இந்த உயர்வு வீட்டு உபயோகிப்பாளரைத் தவிர பிற அனைத்து வகை இணைப்புகளுக்கும் செய்யப்பட்டுள்ளது. இது சிறு, குறு உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள் என பலரையும் பாதித்துள்ளது. அடுத்த ஆண்டு ஜூலையில் வீட்டு உபயோகக் கட்டணமும் உயரக்கூடும்.

அதுமட்டுமல்ல, தேவை அதிகமாக இருக்கும் இரவு நேரங்களில் அதிக கட்டணம் வசூலிக்கும் வகையில் மாறக்கூடிய 'பீக் ஹவர் ரேட்' என்ற முறை ஏற்கெனவே சிறு, குறு தொழில்களில் அமலாக்கப்பட்டு பெரும் எதிர்ப்பை சந்தித்து வருகின்றது. அதேமுறை வீடுகளுக்கும் அறிமுகப்படுத்தும் திட்டமும் உள்ளதென அச்சுறுத்தும் செய்தியும் வந்துகொண்டிருக்கிறது.

### குடியிருப்புகளில் பொதுப் பயன்பாட்டுக் கட்டணம் வணிகக் கட்டணமாக கிடுகிடு உயர்வு

ஆதார் எண்ணுடன் மின் இணைப்பு ஒருவருடத்திற்கு முன்பு சேர்க்கப்பட்டதன் நோக்கமே 'ஒரே வளாகம் ஒரே இணைப்பு திட்டம்' நடைமுறைப்படுத்தத்தான் ஆகும். ஆதார்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

# சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்தவர்கள் இன்று நமக்கு நாட்டுப்பற்றை கற்றுக் கொடுக்கிறார்கள்

1ம் பக்கத் தொடர்ச்சி

வாங்கும் சக்தி குறைந்து கொண்டிருக்கிறது. உற்பத்தி பொருட்களை வாங்க ஆளில்லாமல் கடைகள் மூடப்படுகின்றன. இந்த பொருளாதாரச் சரிவை ஆளும் வட்டாரங்கள் ஒப்புக்கொள்ள தயாராக இல்லை. மாறாக 'வேகம் குறைந்த பொருளாதாரம் (Slowdown of economy)' என்று புதிய வார்த்தைகளை வைத்து உண்மையை மறைக்கின்றனர்.

ஆக முதலாளித்துவ நெருக்கடி பெருகிக் கொண்டிருக்கின்றது. எனவே ஆயுத தொழிற் சாலைகளை ஊக்குவித்து பொருளாதாரத்தைத் தொய்விலிருந்து செயற்கையாகத் தூண்டி மீட்டெடுக்க இந்தியா உட்பட பல நாடுகள் முயற்சிக் கின்றன. பொருளாதாரத்தை இராணுவமயப்படுத்த வட்டாரப் போர்களும் எல்லை தகராறுகளும் அவசியமாகும். உக்ரைன் வட்டாரப் போரில் உலக ஏகாதிபத்திய நாடுகளும் இணைந்துள்ளன. நுகர்வோர் சந்தைக்கு இடமில்லை. எனவே வேலை கிடைக்குமா கிடைத்தாலும் நிரந்தரமாக இருக்குமா என்ற நிச்சயமின்மை நிலவுகின்றது. நாட்டில் நிரந்தர வேலைகள் மறைந்து ஒப்பந்த தற்காலிக பணியாளர்கள் குறைந்த ஊதியத்தில் அமர்த்தப் படுகின்றனர். ஒப்பந்த தொழிலாளர்கள் கொத்தடிமை தொழிலாளர்கள் என நாட்டில் அடிமை காலகட்டம் திரும்பி கொண்டிருக்கின்றது பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளை வறுமையின் காரணமாக விற்கின்றனர் சில கடந்த இரண்டு ஆண்டுகளாக 13 லட்சம் பெண்கள் காணாமல் போயிருக்கின்றனர் என்ற செய்தி தினங்களுக்கு முன்பு வந்தது இவர் களெல்லாம் எங்கே சென்றனர்? உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ பாலியல் சந்தையில் அவர்கள் விற்கப்பட்டிருக்கின்றனர் குழந்தைகள்கூட அவற்றில் விற்கப்படுகின்றனர். மேலும் கோடிக்கணக்கான குழந்தை தொழிலாளர்களும் நமது நாட்டில் இருக்கின்றனர்.

### சுதந்திரப் போராட்டத்தை ஆர்எஸ்எஸ் எதிர்த்தது

இன்று மத்திய அரசாங்கத்தை பாஜக ஆட்சி செய்கின்றது. இந்தக் கட்சி சுதந்திரத்தின், தேசபக்தியின் சின்னம் என தன்னை அழைத்துக் கொள்கின்றது. உண்மை என்ன? இந்த பாஜகவை உருவாக்கிய ஆர்எஸ்எஸ்ஸின் வரலாற்றை மக்கள் அறிவார்களா? நாட்டில் சுதேசி இயக்கம் உச்சியில் இருந்த பொழுது, நடந்து கொண்டிருக்கும் சுதந்திரப் போராட்டம் சரியான போராட்டம் அல்ல என ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கர் குறிப்பிட்டார். சுதந்திரப் போராட்டத்தை பிற்போக்கு இயக்கம் என அவர் கூறினார். அவர் கூறினார்: "எல்லையால் வரையறுக்கப்பட்ட தேசியவாதம் மற்றும் பொது எதிரி ஆகிய கருத்தியல்கள், தேசம் என்ற கோட் பாட்டின் அடித்தளங்களாக அமைந்திருக்கின்றன. இக்கோட்பாடு, நமது உண்மையான ஹிந்து தேசத்தின் நேர்மறையான, எழுச்சி ஊட்டக்கூடிய சாராம்சத்தை இல்லாமல் செய்து விட்டது. மேலும், சுதந்திர இயக்கத்தின் பல்வேறு போராட்டங்களை யதார்த்தத்தில் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கங்களாக மாற்றி, அதுதான் தேசபக்தி, தேசியவாதம் என கருதச் செய்துவிட்டது. இந்தப் பிற்போக்கு கண்ணோட்டம், ஒட்டுமொத்த சுதந்திரப் போராட்டத்தின்மீதும் அதன் தலைவர்கள் பொதுமக்கள் மீதும் பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தி விட்டது." கோல்வால்கரைப் பொறுத்தவரை, "இந்துயிசத்தை மனதில் போற்றி அந்த இலக்கை நோக்கி பணியாற்று பவர்களே அவர்கள் மட்டுமே தேசபக்தர்கள் ஆவர். தேசபக்தர்கள் என கூறிக்கொள்ளும் ஏனையோர் எல்லாம் இந்துக்களின் நலன்களுக்கு பாதகம் விளை விப்பவர்கள், துரோகிகள், நாட்டில் எதிரிகளாவர்."

நாட்டின் சுதந்திரப் போராளிகள் எல்லாம் உயிர்த்தியாகம் செய்து கொண்டிருந்த பொழுது, நேதாஜி விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த பொழுது, பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக போராடு பவர்களைப் பிற்போக்காளர்கள் என கோல்வால் கரும் அவரது இயக்கத்தினரும் கூறிக் கொண்டி ருந்தனர். தேசபந்து சித்திரஞ்சன் தாஸ், விபின் சந்திர பால், திலகர், லாலா லஜ்பத்ராய், நேதாஜி, குதிராம் போஸ், பகத்சிங், சந்திரசேகர ஆசாத், அஸ்பகுல்லாஹ் கான் போன்றவர்கள் எல்லாம் கோல்வால்க்கர் அனுமானத்தில் துரோகிகள் ஆவர். எனவேதான் ஆர்எஸ்எஸ் காரர்கள் சுதந்திரப் போராட்டத்தில் எந்த பங்கையும் வகிக்க வில்லை. ஆனால் இன்று தாங்கள்தான் தேசபக்தர்கள் என்று கூறுகின்றனர். இதை ஏற்றுக் கொள்ள முடியுமா?

### சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்தவர்கள் இன்று நமக்கு நாட்டுப்பற்றை கற்றுக் கொடுக்கிறார்கள்

மற்றொரு இந்துத்துவவாதியான வி டி சாவர்க்கருக்கு 'வீர்' பட்டத்தை ஆர்எஸ்எஸ் பாஜக வழங்கி நேதாஜிக்கு சமமான அந்தஸ்தில் அவரை வைத்துள்ளது. சாவர்க்கர் கூறிய வார்த்தைகள் நம்மிடம் உள்ளன. இவர் அந்தமான் சிறையில் இருந்த பொழுது ஆங்கிலேய ஆட்சியாளர் களுக்கு மூன்று மன்னிப்புக் கடிதங்கள் எழுதினார். அதில் அவர், 'என்னை விடுதலை செய்யுங்கள். விடுவித்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் நான் என்ன செய்ய வேண்டும் என்கின்றதோ அதை நான் செய்வேன். நாட்டிற்கு பணி செய்ய, எனது அறை கூவலைக் கேட்டு வரக்கூடிய அனைவரையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கட்டளைகளை ஏற்று பணி செய்யுமாறு ஏற்றுக் கொள்ள வைக்க என்னால் முடியும்'. ஆனால் இவரைப்போல் குதிராம், பகத்சிங், அஸ்பகுல்லாஹ் கான் மற்றும் பலர் மன்னிப்பு கேட்டு கெஞ்சவில்லை. தலை நிமிர்ந்து தூக்குக்கயிறை முத்தமிட்டனர். 1942ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடந்து கொண்டிருந்த பொழுது இரண்டாம் உலகப் போருக்காக ஆங்கிலேய இராணுவத்திற்கு சாவர்க்கர் இந்திய வீரர்களை தேர்வு செய்து கொடுத்து கொண்டிருந்தார். மேலும் அவர் இந்தியாவை மதத்தின் அடிப்படையில் பிரிக்க வேண்டும் என்றும் கூறினார். இவர்கள் இன்று நாட்டு மக்களுக்கு தேசபக்தியை பற்றி கற்றுக் கொடுத்துக் கொண்டி ருக்கின்றன. இவர்களின் உண்மையான நிறத்தை நாட்டு மக்கள் உணர வேண்டும்.

### அறிவியலின் கதவுகளை பாஜக மூடிக் கொண்டு இருக்கிறது

நாட்டில் அறிவியல் கடைபிடிக்கப்படுவதை பாஜக தடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் நான் வலியுறுத்த வேண்டும். பாடப்புத்தகத்திலிருந்து டார்வின் பரிணாமக் கொள்கையை அகற்றிவிட்டு வேதம் வேதாந்தம் மனு சம்ஹிதம் ஆகியவை படிக்க வேண்டும் என ஊக்குவித்துக் கொண்டி ருக்கிறது. ஆனால் வேதாந்தமும் சமஸ்கிருதக் கல்வியும் நாட்டை இருளில் கொண்டு செல்லும் என மறுமலர்ச்சிக் கால முன்னோடியான இராஜாராம் மோகன் ராய் கூறினார். ஐரோப்பிய நவீன அறிவியலையும் அரசியல் பொருளா தாரத்தையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார் அவர். மறுமலர்ச்சி கால மற்றொரு முன்னோடி வித்யாசாகர், 'அறிவியலின் அடிப்படை யிலான பகுத்தறிவு மனப்பான்மையையும் பொருள் முதல்வாத தத்துவத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும். மத முன்னபிப்பிராயங்களிலிருந்து விடுபட்ட, வங்கம் மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் நமக்கு வேண்டும்' என மேற்கு வங்கத்தில் அவர் பேசினார். ஐரோப்பாவில் இருந்து அறிவியலை எடுத்துக் கொள்ள வேண்டும் என விவேகானந்தர்கூட கூறினார். அவர் மேலும் கூறுகிறார்: "பிரபஞ்சத்தை பற்றி விஞ்ஞானிகளும் விண்ணியல் அறிஞர்களும் என்ன சொல்கின்றார் கள் என்பதை நாம் அறிவோம். பண்டைய கால இறையியலாளர்களுக்கு அது எப்படிப்பட்ட அடியைக் கொடுத்தது என்பதையும் நாம் அறிவோம். தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும் இறையலாளர்களின் வீட்டின் மீது ஒவ்வொரு குண்டு பொழிவதைப் போல் இருக்கின்றது. எனவே தான் எல்லாக் காலகட்டத் திலும் அவர்கள் அறிவியல் ஆராய்ச்சியை முடக்க முயற்சித்திருக்கின்றனர்". விவேகானந்தரின் இந்த கூற்றைப் பற்றி பாஜக ஆர்எஸ்எஸ் காரர்கள் என்ன சொல்வார்கள்? இவர்கள் இப்போது வேதத்திலும் வேதாந்தத்திலும் கீதையிலும் மனு சாஸ்திரத்திலும் நவீன அறிவியல் கோட்பாடு களை கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றனர். வேத காலத்திலேயே நமது முன்னோர்கள் நிலவிற்கு சென்று விட்டார்கள் என்றும் இவர்கள் கூறக்கூடும்.

### யார் உண்மையான இந்து? ராமகிருஷ்ணா விவேகானந்தர் போன்றோரா, அல்லது பாஜக ஆர்எஸ்எஸ் காரர்களா?

நீங்கள் இராமாயணத்தைப் பற்றி பேசுவதனால், அதற்காக ராமன் என்ற ஒருவர் நிஜமாகவே இருந்தார் என ஏற்றுக் கொள்வது அவசியம் இல்லை, இராமாயணத்திலிருந்து எதையாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவசியம் என்றால் அவற்றை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என விவேகானந்தர் குறிப்பிட்டார். "எனக்கு ஒரு மகன் இருந்தால், யார் உண்மையை பிரதிபலிக்கிறார் என அவர் கருதுகிறாரோ அவரின் சீடராக அவர் இருக்கக்கூடும்". அவர் மேலும் சொன்னார்: "முழு சுதந்திரத்துடன் எந்த மோதலும் இன்றி ஒரே நேரத்தில் எனது மகன் புத்த மதத்தினராகவும் எனது மனைவி கிறிஸ்துவராகவும் நான் ஒரு இஸ்லாமியராகவும் இருக்க முடியும். இது மிக இயற்கையானது". இந்த விவேகானந்தரை பாஜக ஆர்எஸ்எஸ் ஒரு இந்துவாக ஏற்றுக் கொள்ளுமா? அவர் மேலும் கூறினார்: "எந்த மதமும் எப்பொழுதும் மக்களை ஒடுக்கியது இல்லை. இவ்வகையான அனைத்து ஒடுக்கு முறையையும் செய்ய மக்களை தூண்டியது எது? தவறுகளை செய்ய மக்களை தூண்டியது அரசியலே அன்றி மதம் அல்ல." விவேகானந்தரின் இந்த போதனைகளில் இருந்து பார்க்கும்போது பாஜக ஆர்எஸ்எஸ் இன்று எங்கே நிற்கின்றது? குறுகிய அரசியல் லாபத்தை பெறுவதற்காக மதக்கலவரங் களைத் தூண்ட இவர்கள் மதத்தை பயன்படுத்த வில்லையா? சர்ச்சிலும் மசூதியிலும் பிரார்த்தனை செய்து குரானை ஓதியதால் ராமகிருஷ்ண பரமஹம்சர் முஸ்லிம்களின் ஏஜெண்ட் ஆகிவிட்டாரா? ஜலம், பானி, நீர் என்பதெல்லாம் ஒரே பொருளைக் குறிப்பது போல பகவான், அல்லா, கடவுள் எல்லாம் ஒன்று தான் என அவர் குறிப்பிட்டார். அப்படி என்றால் யார் உண்மை யானது? ராமகிருஷ்ண விவேகானந்தர் ஆகியோரா அல்லது பாஜக ஆர்எஸ்எஸ் நபர்களா?

அயோத்தியில் பாஜக ராமர் கோயிலை கட்டுவதும் அடுத்த தேர்தலை கணக்கில் கொண்டு தான் ஆகும். அதேபோல சில நாட்களுக்கு முன் வந்த செய்தியின் படி, வரும் தேர்தலை குறி வைத்து ராமநவமி மற்றும் துர்கா பூஜைகளை நடத்துமாறு மேற்கு வாங்க பாஜக தலைவர்களை அகில இந்திய பாஜக ஆர்எஸ்எஸ் குழு ஆலோசனை கூறியுள்ளனர். இதுதான் மதத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பக்தி. உண்மையில் இது தேர்தல் அதிகார அரசியல் மீதான அவர்களின் பக்தியாகும். ஆக பாஜக ஆர்எஸ்எஸ், மறுமலர்ச்சிக்கு எதிரானவர்கள், சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரானவர்கள், மேலும், உண்மையான இந்துயிசத்திற்கும் எதிரானவர்கள்.

### இந்தியா கூட்டணி எந்த இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது

சமீபத்தில் எதிர்க்கட்சிகள் எல்லாம் இணைந்து இந்தியா என்ற கூட்டணியை அமைத்தன. இந்த இந்தியா, எந்த இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது? சுரண்டப்படும் ஒடுக்கப்படும் ஏழை இந்திய மக்களையா அல்லது அம்பானி அதானி டாட்டா பிர்லா ஆகியோரின் இந்தியாவையா? காங்கிரஸ் இக்கூட்டணியில் இருக்கின்றது. இந்த கட்சிதான் முதலில் நாட்டில் பாசிசத்தின் அடித்தளமான முதலாளித்துவத்தை உறுதி செய்து வலிமைப்படுத்தியது. இந்த காங்கிரஸை ஜனநாயக, மதச்சார்பற்ற கட்சி என சிபிஐ(எம்) அழைக்கின்றது. காங்கிரஸ் ஆட்சியில் கலவரங்களே நடைபெற வில்லையா? பகல்பூரிலும் மூர்கோனாவிலும் மதக்கலவரங்கள், அஸ்ஸாமில் நெல்லியில் மதவெறியாட்டம், டெல்லியில் சீக்கியர் படுகொலை, காஷ்மீரில் மதக் கலவரங்கள் என இவை யாவும் காங்கிரஸால் மூட்டிவிடப்பட்டவயாகும். இந்த காங்கிரஸ் எப்படி ஜனநாயக மதச்சார்பற்ற கட்சியாகமுடியும்? 1959 ஆகஸ்ட் 31 அன்று மேற்கு வங்கத்தில் ஏராளமான உணவுக்காகப் போராடி ஊர்வலத்தில் சென்றவர்களைத் தாக்கி இரத்தம்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

# திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியிலும் கொலை, ஊழல், பயங்கரவாதம் வளர்ந்து கொண்டிருக்கின்றது

2ம் பக்கத் தொடர்ச்சி

சொட்ட வைத்தது யார்? அன்றைய காங்கிரஸ் ஆட்சியில் சுடப்பட்ட, பிளவுபடாத சிபிஐ கட்சியின் உறுப்பினர்களான, நான்கு பெண் தியாகிகளின் நினைவாக கொல்கத்தாவில் பௌபஜார் சதுக்கத்தில் தியாகிகள் ஸ்தூபி வைக்கப்பட்டுள்ளது. அதே காங்கிரசுக்கு இன்று ஜனநாயக மதச்சார்பற்ற கட்சி என்ற முத்திரையை சிபிஐஎம் கட்சி குத்துகின்றது.

### பிராந்திய கட்சிகளும் ஜனநாயகத் தன்மை கொண்டவைகள் அல்ல

எந்தப் பிராந்தியக் கட்சியாவது ஜனநாயகத் தன்மை கொண்டிருக்கின்றதா? மக்கள் இயக்கங்களை ஒடுக்குவதிலும் எதிர்க்கட்சிகளின் குரல்வளையை நசுக்குவதிலும் இக்கட்சிகளும் பாசிசத் தன்மையுடன் தான் நடந்து கொள்கின்றன. மேலும், மத்தியிலும் மாநிலங்களிலும் அதிகாரத்தில் இருக்கும்போது இவர்கள் அனைவருமே ஊழலில் திளைக்கின்றார்கள். இன்றைக்கு அனைத்துப் பெரிய முதலாளித்துவக் கட்சிகளும் பிராந்திய முதலாளித்துவக் கட்சிகளும் கொண்டிருக்கும் ஒரே கொள்கை 'ஊழல்செய்தல்' தானாகும். ஒவ்வொரு வரும் கழுத்து முட்ட ஊழலில் மூழ்கி இருக்கின்றனர். ஆனால் நாங்கள் அப்பாவிகள் என்றும் எதிர்க் கட்சியினர்தான் ஊழல் செய்கின்றனர் என்றும் கூறுகின்றனர். உண்மையில் ஊழல் செய்வதில் ஒருவருக்கு ஒருவர் போட்டி போடுகின்றனர். எப்படி மக்களை சுரண்டி கோடான கோடியை லாபமாக அடைவதை டாட்டா பிர்லா அம்பானி அதானி போன்ற முதலாளிகள் இலக்காகக் கொண்டிருக் கின்றார்களோ அதைப்போலவே இந்த கட்சிகளும் தங்கள் எம்எல்ஏ எம்பிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி மந்திரிப் பதவிகளைப் பிடித்துக் கொண்டு ஊழல் மூலம் பணத்தைச் சுருட்டிக் கொள்வதை இலக்காகக் கொண்டிருக்கின்றன. மக்கள் பணத்தைச் சூறையாடுவதில் போட்டா போட்டி போடுகின்றனர். மக்கள் பணத்தை அவர் கொள்ளை அடித்தால் நான் ஏன் கொள்ளை அடிக்கக் கூடாது என வாதிடுகின்றனர். வேறொருவர் மக்கள் பணத்தை கையாடினால் எனக்கும் அதே குற்றத்தை செய்வதற்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டுள்ளது என கூறுகின்றனர். இது ஏதோ அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையைப் போல பேசுகின்றனர். மக்களும் கிட்டத்தட்ட இதனை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுவிட்டனர். யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் கொள்ளையடிப்பதை மட்டுமே செய்வார்கள் என நினைக்கின்றனர். இவ்வாறு சிந்திப்பது மிக மிக அபாயகரமான தாகும். முதலாளித்துவம் அதன் முழுமையான அம்சத்தில் எப்படி ஊழல் மிக்கதாக ஆகிவிட்டதோ அதேபோல தேசிய மற்றும் பிராந்திய முதலாளித்துவக் கட்சிகள் எல்லாமே ஊழல் மலிந்ததாக மாறிவிட்டன. இவர்கள் எல்லோரும் சேர்ந்து மக்களையும் ஊழலில் ஈடுபடுத்துகின்றனர். அரசியல் குற்றமயமாகவில்லை; மாறாக அரசியல்வாதிகள்தான் அரசியலை குற்றமயமாக்கி கொண்டிருக்கின்றார்கள்.

### திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியிலும் கொலை, ஊழல், பயங்கரவாதம் வளர்ந்து கொண்டிருக்கின்றது

இந்தியா கூட்டணியில் திரிணாமுல் காங்கிரஸும் ஓர் அங்கத்தினராகும். திரிணாமுல் காங்கிரஸ் முதன் முதலில் மேற்கு வங்கத்தில் ஆட்சிக்கு வந்த போது நாங்கள் மாற்றத்தைக் கொண்டு வர வந்திருக்கின்றோம் பழிவாங்க அல்ல என்றார்கள். ஆனால் என்ன செய்தார்கள்? அவர்கள் ஆட்சியும் 34 வருட சிபிஎம் ஆட்சியின் ஜெராக்ஸ் காப்பியாகத் தான் இருக்கின்றது. முதலாளித்துவ சிண்டிகேட்டுகள், காண்டிராக்டர்கள், ப்ரமோட்டர்கள் ஆகியோரின் ஆட்சியாகத்தான் இதுவும் இருக்கின்றது. இலஞ்சம் வாங்குவதும் ஒப்பந்தங்களில் கமிஷன் வாங்குவதும் ஏராளமாக பெருகிவிட்டது. கட்டுக் கடங்காத தீவிர ஊழல் நடந்து கொண்டிருக் கின்றது. சிபிஐ(எம்) கட்சியிலிருந்து இவர்களின் ஒரே வேறுபாடு, அவர்கள் இதே செயல்களை மிகவும் அமைப்பாக (ஆர்கனைஸ்டாக) மிகுந்த திறனுடன் செய்தார்கள், திரிணாமுல் கட்சி ஒழுங்கின்றி அப்பட்டமாகச் செய்கின்றார்கள் அவ்வளவுதான். இந்தக் கட்சியும் மக்கள் இயக்கங்களை நசுக்குகின்றது. அரசு ஊழியர்கள் வாயைத் திறக்க முடியாது. யாருமே எதிர்த்துப் போராடமுடியாது. இவர்கள் ஆட்சியில் ஒரு ஆர்ப்பாட்டத்தின் போது எங்கள் கட்சியின் இரண்டு தோழர்கள் போலீஸ் தடியடியினால் கண் பார்வையை இழந்துவிட்டனர். சமீபத்தில் குல்த்தலி பகுதியில் நமது கட்சியின் முன்னணி தோழர் சுபான்ஷூ ஜனா கழுத்தை நெறித்துக் கொல்லப்பட்டு மரத்தில் தொங்கவிடப்பட்டு தற்கொலை செய்து கொண்டது போன்ற தோற்றத்தை ஆளும் கட்சியினர் ஏற்படுத்தினர். காவல்துறை அறிக்கையில் இது கொலை என்று குறிப்பிட்ட வர்கள். பின்னால் ஆளும் கட்சியில் அழுத்தத்தினால் அது தற்கொலை என மாற்றினர்.

எப்படி மத்திய அரசாங்கம் ஆயுஷ்மான் பாரத், சுவச் பாரத், ஆவாஸ் யோஜனா என பல திட்டங்களை ஓட்டு வாங்குவதற்காக போடுகின்றதோ அதேபோல, மேற்கு வங்க மாநில அரசாங்கமும் லட்சுமி பந்தர், கன்னியாஸ்ரீ, யுவஸ்ரீ போன்ற திட்டங்களை போட்டு ஓட்டு வங்கியைக் குறி வைக்கின்றது. வேலையின்மை பிரச்சினையைத் தீர்ப்பது விலையுயர்வைக் கட்டுப்படுத்துவது போன்ற முக்கியமான கடமைகளைப் புறந்தள்ளி, பணத்தைக் கொடுப்பது, இலவசங்களை அறிவிப்பது போன்ற வற்றை மாநில அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. அந்தக் காலத்து ஜமீன்தார்களும் இதைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். பண்ணை அடிமைகளை கசக்கி பிழிந்து ரத்தத்தை உறிஞ்சி விட்டு இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை ஏழைகளுக்கு உணவு பரிமாற்றம் என்ற சடங்கை அவர்கள் செய்வார்கள்.

மேற்கு வங்கத்தில் ரேஷனில் வழங்குவதன் மூலம் ஒரு கிலோ அரிசிக்கும் 500 ரூபாய்க்கும் ஏழைகளை விலைக்கு வாங்க முயற்சிக்கின்றனர். வட்டார கிளப்புகளை ஆரம்பித்து, துர்கா பூஜைக்காக மக்களிடம் சென்று பல்லாயிரம் ரூபாய் வசூலிக்க வேலையில்லா இளைஞர்களை அனுப்புகின்றனர். இன்று தேர்தலின்போது ரத்தக் களரி நடப்பது அன்றைய காங்கிரஸ் ஆட்சியிலும் சிபிஐ(எம்) ஆட்சியிலும் நடந்தது. இன்றைக்கு விட அன்றைக்கு அதிக ரத்தம் ஓடியதா அதிக கொலைகள் நடந்ததா என்பது அல்ல முக்கியம். ஏன் அப்படி நடக்கிறது என்பதுதான் நமது கேள்வி. பாஜக ஆளும் பிற மாநிலங்களிலும் மதவெறிக் கலவரங்கள் நடக்கின்றன. தேர்தலைக் குறி வைத்துக் கலவரங்கள் முழு வீச்சில் நடைபெறுகின்றன. இதே காரணத் திற்குத்தான் மணிப்பூரும் பற்றி எரிகிறது. ஹரியாணாவில் மதவெறி ஆட்டங்கள் அதிகரித் துள்ளன. சிபிஐ(எம்) ஆட்சியில் சாராயக்கடைகளுக்கு லைசன்ஸ் வழங்கப்பட்டது. இதற்கு அரசு வருவாய் ஈட்டுவதைக் காரணம் காட்டினார்கள். இப்போது திரிணாமுல் காங்கிரஸ் அவர்களை மிஞ்சி அதிகமாக சாராயக்கடைகளை திறந்து உள்ளது.

1977இல் மேற்குவங்கத் தேர்தலின் போது சிபிஐ(எம்) தேர்தலில் முறைகேடுகள் எதுவும் செய்யவில்லை. காங்கிரசுக்கு எதிரான மனநிலையில் மக்கள் வாக்களித்தனர். பிறகு மக்களிடம் செல்வாக்கை இழந்து கொண்டிருந்த சிபிஐ(எம்), பூத்தை கைப்பற்றுதல் கள்ள ஓட்டுக்களைப் போடுதல் என பெரிய அளவில் முறை கேட்டில் ஈடுபட்டது. இதே போல சிபிஐ(எம்) குண்டர்களுக்கு எதிராக 2009லும் 2011லும் வெளிப்படையாக கையில் ஆயுதத்துடன் திரிணாமுல் கட்சிக்கு மக்கள் வாக்களித்தனர். அப்பொழுது பூத்துக்களை கைப்பற்ற வேண்டிய அவசியம் திரிணாமுல் கட்சிக்குத் தேவைப்படவில்லை. ஆனால் இன்று மக்கள் நம்பிக்கை இழந்து விட்டதால் இந்த கட்சிக்கும் தேர்தல் முறைகேடுகள் தேவைப் படுகின்றது.

### தேர்தலின் போது முதலாளித்துவ ஊடகங்களால் உருவாக்கப்படும் தேர்தல் அலையில் மக்கள் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்

தேர்தல் இன்று முழுக்க முழுக்க கேலிக் கூத்தாகிவிட்டது. தேர்தலின் போது முதலாளித்துவ வர்க்கம் தாங்கள் விரும்பும் கட்சிகளுக்கு ஏராளமாக பணத்தை வாரி வழங்குகின்றது. முதலாளித்துவ வர்க்கம் வீடியோவையும் செய்தித்தாளையும் டிவி சேனல்களையும் பயன்படுத்தி தனக்கு சாதகமான கட்சி அல்லது கூட்டணிக்கு சாதகமான ஒரு அலையை தோற்று விக்கின்றது. விழிப்புணர்வு இல்லாவிட்டால் ஒற்றுமை இல்லாவிட்டால் உண்மையான புரட்சிகர கட்சியை அடையாளம் காணாவிட்டால் மக்கள் இந்த அலையினால் அடித்துச் செல்லப் படுவர் என தோழர் சிப்தாஸ் கோஷ் கூறினார். ஓட்டுக்கு பணம் கிடைக்கும் என்ற பொதுவான எதிர்பார்ப்பும் மக்களிடையே உருவாக்கி விட்டது. 5 ஓட்டுகளுக்கு ரூபாய் ஐந்தாயிரம், பத்தாயிரம் கிடைக்கக்கூடும். 50 ஓட்டுகள் என்றால் ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும்! இந்தப் பணம் ஏழைகளுக்கு மிக மிக முக்கியமானதாகும். ஆக ஓட்டுக்கள் பணத்திற்கு விற்கப்படுகின்றன. இதுதான் ஜனநாயக தேர்தல். இந்த பணம் எங்கிருந்து வருகின்றது? முதலாளிகளிடம் இருந்து, பெரிய வணிகர்களிடமிருந்து, கறுப்பு பணக்காரர்கள் இடமிருந்து, அரசாங்கத்தில் சுருட்டப்பட்ட பணத்தில் இருந்து வருகின்றது. இப்படி இவர்கள் முதலீடு செய்த பணத்தை ஆட்சிக்கு வந்த பிறகு விலைவாசியை ஏற்றியும் வரிகளை விதித்தும் மீட்டெடுத்து விடுகிறார்கள்.

மக்களால் மக்களுக்காக மக்களின் ஆட்சி என்ற சொற்கள் வெறும் பாடப்புத்தகத்துடன் நின்று விட்டது. உண்மையில், இது முதலாளிகளால் முதலாளிகளுக்காக முதலாளிகளின் ஆட்சி என்றாகிவிட்டது. தேர்தலில் முடிவுகளை பணபலம் ஆட்பலம் நிர்வாக பலம் ஊடக பலம்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## செப்டம்பர் 5
## சுதந்திரப் போராட்ட வீரர்
# வ உ சிதம்பரனார்
## 151வது பிறந்ததினம்

**அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO), ஆல் இண்டியா யுனைடெட் டிரேடு யூனியன் சென்டர் (AIUTUC) இணைந்து சென்னையிலும் தேனியிலும் போடியிலும் நிகழ்ச்சி அனுசரிப்பு**




தேனி

## செப்டம்பர் 28
# தியாகி பகத்சிங்
## 116வது பிறந்ததினம்

**அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), சென்னை சைதாப்பேட்டை பூங்கா, வியாசர்பாடியில் தியாகி பகத்சிங் பிறந்த தினம் அனுசரிப்பு மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் புத்தக விற்பனை**



வியாசர்பாடி, சென்னை

## தமிழக மின்வாரியத்தின் தொடர் அதிரடித் தாக்குதல்கள் . . .

# இலாபத்தில் இயங்கிய தமிழக மின்வாரியம் நஷ்டத்தில் போனது ஏன்?

1ம் பக்கத் தொடர்ச்சி

எண் இணைத்ததன் மூலம் ஒரே நபரின் பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புகள் இருந்தால், ஒவ்வொரு மீட்டரும் தனித்தனியாக கணக் கெடுக்கப்பட்டு முதல் 100 யூனிட்டுக்கு இலவசம், அடுத்தடுத்த ஸ்லாபில் படிப்படியாக உயர்த்தப் பட்ட கட்டணம் என ஒரே நபர் இருமுறை மானியத்தை அனுபவிக்கிறார். இதனை சென்ற ஆண்டு திமுக அரசாங்கம் கண்டுபிடித்துவிட்டது! யதார்த்தத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புகள், அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகிய இடங்களில் ஒரு பொதுவான மீட்டர் யாருடைய பெயரிலாவது இரண்டாவது இணைப்பாக இருக்கும். இந்த இணைப்பும் நீர் இறைக்கும் பம்பு, பொது மின்விளக்குகள், லிஃப்ட் என வீட்டுப் பயன் பாட்டிற்குத்தான் இருக்கின்றது. வேண்டு மென்றால், அதற்குரிய 100 யூனிட் இலவசத்தை நீக்கலாம் என பொது மக்களில் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால், அந்த பயன்பாட்டிற்கு யூனிட் ரூ8.15 என வணிகப் பயன்பாட்டுக் கட்டணமாக திடீரென வசூலிக்கத் துவங்கிவிட்டனர். இதுவரை வெறும் 250 ரூபாய் கட்டியவர்கள் இம்முறை ரூ2000க்கும் மேல் கட்டியுள்ளனர்.

இப்படியே விட்டால், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளோருக்கு மட்டுமே 100 யூனிட் இலவசம் என்று கூறி பெரும்பான்மை மக்களுக்கு இந்த மானியம் நீக்கப்படும். பிறகு ஸ்லாப் சிஸ்டமும் நீக்கப்பட்டு பெரும்பான்மை மீட்டர்களுக்கு இதே உயரிய கட்டணம் விதிக்கப்படலாம். அதேபோல, 'நுகர்வோருக்கே நேரடி மானியம்' என்று கேஸ் சிலிண்டருக்கு மானியத்தை வங்கிக் கணக்கில் போடுவோம் எனச் சொன்னதுபோல, மின்சார மானியத்தை நேரடியாக வங்கிகளில் செலுத்தும் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது. கேஸ் சிலிண்டருக்கு என்ன ஆயிற்று என நமக்குத் தெரியும். எப்பொழுது கேட்டாலும் நஷ்டத்தைச் சமாளிக்க கட்டண உயர்வு அவசியம் என மாநில அரசாங்கம் கூறுகிறது.

### இலாபத்தில் இயங்கிய தமிழக மின்வாரியம் நஷ்டத்தில் போனது ஏன்?

இந்தத் தலைப்பில் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையே எழுதலாம். சமூக ஆர்வலர்கள் பலரும் இது குறித்து அங்கலாய்த்து ஓய்ந்துவிட்டனர். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை இலாபத்தில், அல்லது குறைந்தது நஷ்டமின்றி இயங்கி வந்த தமிழக மின்துறை, தனியார்மய தாராளமயக் கொள்கை யாலும், ஊழல், அதிகவிலையில் வாங்குதல், மின் திருட்டு, மின்கடத்தியில் இழப்பு போன்றவற்றாலும் நஷ்டக் கணக்கைக் காட்டத்துவங்கியது. நஷ்டஈட்டை அதற்குக் காரணமானவர்களிமிருந்து வசூலிக்காமல் அரசாங்கமே மக்கள் வரிப்பணத்தில் ஏற்று வந்தது. பிறகு வட்டிக்குக் கடன் வாங்கத் துவங்கி சென்ற ஆண்டுவரை கடன் 1,60,000 கோடியாக உயர்ந்துள்ளது. இவ்வாண்டும் அதேயளவு கடன் இருப்பதாக செய்திகள் வருகின்றன. இதற்கு வட்டி ஆண்டுக்கு சுமார் 16,500 கோடியாகும். வட்டி விகிதம் ஆண்டுக்கு 10.4%. ஒவ்வொரு ஆண்டு வட்டியும் அசலுடன் சேர்ந்து அதற்கும் கூட்டு வட்டி போடப்பட்டு மக்கள் பணம் தனியார்துறை வங்கிகளால் சுரண்டப்படுகிறது.

உதய் திட்டத்தின் படி கடனில் 25% மட்டுமே மத்திய அரசாங்கம் தள்ளுபடி செய்யும். மீதம் 75% கடனும் புதிதாக ஏற்படும் நஷ்டங்களும் சேர்ந்து வட்டிக்கு தமிழக அரசாங்கம் மேலும் கடன் வாங்கிக் கொண்டே இருக்கும். அப்படி என்றால் கட்டணத்தை உயர்த்தி மக்களைக் கசக்கிப் பிழிந்து வசூலித்த பணம் எங்கே செல்கிறது? மின்வாரியத்தில் முறைகேடுகள் செய்பவர்களுக்கும், மின்மாற்றிகள் மின்கம்பிகள் விற்கும் வணிகர்களுக்கும் மின்னுற்பத்தியாளர்கள், கடன் கொடுக்கும் வங்கிகள் மற்றும் ஊழல் செய்யும் அரசாங்க அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும்தானே செல்கிறது?

வீடுகளுக்கு குறைந்த கட்டணம் தருவதாகவும் அதனை அதிக கட்டணமாக வணிகர்களிமிருந்து வசூலிக்கவும் (Cross subsidy) ஒவ்வொருமுறையும் திட்டம் போடுகின்றனர். அதே சமயம் வணிக மற்றும் தொழில் நிறுவனங்கள் வேறு ஒரு திட்டத்தின் மூலம் காற்றாலை, சூரிய மின்னுற்பத்தி போன்ற மின்சாரப் பண்ணைகளை தாங்களே அமைத்து மின்வாரியக் கடத்திகள் மூலம் தாம் இருக்கும் இடத்தில் தமக்கு வேண்டிய மின்சாரத்தை நுகர்கின்றனர். எஞ்சியவற்றை வாரியத்திற்கு விற்றுவிடுகின்றனர். எனவே, அவர்கள் மின்வாரிய மின்கடத்தி நெட்ஓர்க் சேவைக்கு எவ்வளவு தருகிறார்கள் என்ற விவரங்கள் வெளிப்படையாக இல்லை. அதுமட்டுமல்ல. காற்றாலை, சூரிய மின்சக்தி ஆகியவற்றை முடக்காமல் பயன்படுத்த வேண்டும் என்ற முறை (Must Run Status) ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பதால், அவர்கள் உற்பத்தி செய்த காற்றாலை/சூரிய மின் சக்தியை மின்வாரியம் கட்டாயம் கொள்முதல் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டாலும் இந்த தொழில் நிறுவனங்களுக்கு பணம் கொடுத்தாக வேண்டும். இப்படி அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பணம், மானியம், வழக்கு களுக்கான செலவு என மின்வாரியத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் சென்ற ஆண்டு மட்டுமே ரூ63,060 கோடி ஆகும். காற்றாலை மின்சார கொள்முதலில் பல்வேறு முறைகேடுகளால் அடைந்த நஷ்டம் மேலும் அதிகமாகும்.

ஆக, நஷ்டத்திற்கு யார் காரணம் என்பது தெளிவு. மக்கள் தாங்கள் நுகர்ந்த மின்சாரத்திற்கு கட்டணம் கட்டுகிறார்கள். எனவே அவர்கள் மீதே இந்த நஷ்டச் சுமையை சுமத்துவது எப்படி நியாயம்?

### 'ஸ்மார்ட் மீட்டர்' திட்டம் என்ற மற்றொரு அதிர்ச்சி

இதில் என்ன அதிர்ச்சி, மீட்டர்தானே என பலர் நினைக்கலாம். முதலில் இது என்ன என்று புரிந்துகொள்வோம். ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள மீட்டர்கள் அனலாக் மீட்டர் எனப்படும் எலெக்ட்ரோமெக்கானிகல் மீட்டர்களாகும். அதில் நடுவில் ஒரு சக்கரம் சுற்றுவதைப் பார்க்கலாம். ஒருமுறை சுற்ற 7.2 வாட்ஸ் சக்தி தேவைப்படும். அது 138முறை சுற்றினால், மீட்டரில் வலது கோடியில் உள்ள முழு எண் ஒரு எண்ணிக்கை உயரும். அது ஒரு யூனிட் ஆகும். கடந்த சுமார் 10 ஆண்டுகளாக இந்த மீட்டருக்குப் பதிலாக ஸ்டேடிக் மீட்டர் (இதில் மூவிங் சக்கரம் இல்லாததால் இப்பெயர்) எனப்படும் டிஜிட்டல் மீட்டர் பொருத்தப் பட்டு வருகிறது. இதில் யூனிட் ரீடிங் LCD டிஸ்ப்ளே மூலமாக தெரிந்து கொள்ளலாம். இது துல்லியமாக மின் நுகர்வை அளந்துவிடும். இந்த வகை மீட்டர்களின் ரீடிங் எடுக்க பணியாட்களை மின்வாரியம் தொகுப்பூதியத்தில் அமர்த்தியிருக்கின்றது.

ஸ்மார்ட் மீட்டர் என்பதும் ஸ்டேடிக் டிஜிட்டல் மீட்டர்தான். ஆனால் அதில் சிம் கார்டு பொறுத்தப்பட்டு GPRS முறையில் செல் டவர் மூலம் தொடர்ந்து தகவல் பரிமாறப்படும். இதில் நுகர்வோர் தான் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவை எப்பொழுது வேண்டுமானாலும் பார்க்கலாம். செய்திப் பரிமாற்றம் இரு வழியிலும் நடக்கும். ரீடிங் எடுக்கவோ, பணம் கட்டாவிட்டால் ஃபியூஸ் பிடுங்கவோ ஆட்கள் தேவையில்லை. வாரிய அலுவலக சர்வரிலிருந்து தகவல் பரிமாற்றத்தின் மூலம் தானாகவே மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிடும். இதற்கு முன் குறிப்பிட்ட மீட்டரின் விலை சுமார் ரூ1600 என்றால் ஸ்மார்ட் மீட்டர் ரூ9500. தமிழ்நாட்டில் இருக்கும் மூன்று கோடியே ஆறு இலட்சம் மீட்டர்களை தற்போது ஸ்மார்ட் மீட்டர்களால் மாற்றப்போகிறார்கள். இதற்கு ரூ30,000 கோடி செலவாகப்போகிறது.

நன்றாக ஓடிக்கொண்டிருக்கும் மீட்டர்களை இப்படி மாற்றுவதற்கு அரசாங்கம் சொல்லும் காரணம், பணியாட்கள் ரீடிங் எடுக்கும்போது தவறு செய்கிறார்களாம். என்ன தவறு? சில நேரங்களில் யூனிட்டுகளை நெருங்கிய எண்ணுக்கு ரவுண்ட் ஆஃப் செய்து எழுதிவிடுகிறார்கள். இதில் விட்டுப்போன/சேர்க்கப்பட்ட யூனிட்டுகள் அடுத்தமுறை ரீடிங் எடுக்கும்போது எப்படியும் சரியாகிவிடும். இது ஒரு பெரிய தவறா? வேறு சில நேரங்களில் தவறாக குறிக்கப்பட்டோ அல்லது கணினியில் உள்ளிடும்போது தவறு ஏற்பட்டோ கணக்கில் தவறு ஏற்படுகிறது. இது மிகமிகக் குறைவு. இதனால் என்ன நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? இதற்கு விடையில்லை. எனவே 'சுமார் 15,000 பணியாளர்கள் இனி தேவையில்லை, அந்தச் செலவு குறையும்' என்கிறார்கள். முதலில் இந்தப் பணிநீக்கம் ஓர் அநியாயம். அடுத்து, இந்தச் செலவு குறையும் என்பதும் உண்மையல்ல. ஏனெனில், 3 கோடி ஸ்மார்ட் மீட்டரும் தொடர்ந்து ஒவ்வொரு மணிக்கும் இருவழி தொடர்பு கொள்ள வேண்டுமானால் ஒரு மீட்டர் ஒரு நாளைக்கு 24 முறை, இரு மாதத்திற்கு குறைந்தது 1440 முறை கம்ப்யூட்டர் சர்வருடன் தொடர்பு கொள்ள வேண்டும். இதற்கு ஏர்டெல், பிஎஸ்என்எல், ஜியோ போன்ற நெட் ஓர்க் சேவை நிறுவனத்திற்கு எவ்வளவு தரப்போகிறார்கள்? ஒரு குறுஞ்செய்திக்கு 1 பைசா என்றாலும் ஒரு மீட்டருக்கே இரு மாதத்திற்கு சுமார் ரூ14 ஆகிவிடாதா? இதுவே 3 கோடி மீட்டர்களுக்கு 42 கோடி!

இன்றையதினம் ஒரு பணியாள் மாதமொன்றுக்கு சுமார் 5000 மீட்டருக்கு ரீடிங் எடுக்கிறார். இந்தப் பணிச்சுமையை குறைக்க அதிக ஆள் வேண்டும் என்ற பணியாளர்களின் கதறல் ஒருபுறம் இருந்து கொண்டிருக்கிறது. ஆக, 7000 நபர்களே மொத்த ரீடிங்கையும் எடுத்து மேலும் சுமார் 7000 பேர் அதனை கணினியில் ஏற்றி கவுன்டரில் வசூலும் செய்கிறார்கள். சுமார் 15,000 பேருக்கு ரூ20,000 தொகுபூதியம் என்றாலும் செலவு 30 கோடிதான். ஆனால் இவர்களை பணி நீக்கம் செய்து ஸ்மார்ட் மீட்டரைப் பொருத்தி நெட் ஓர்க் சேவைக் கட்டணம் செலுத்தப்போவது உத்தேசமாக 42 கோடி. இது ஊதியத்தைவிட அதிகம்.

ஆக, ஸ்மார்ட் மீட்டர் பொறுத்துவதற்காகக் கூறப்படும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவையாகும். தற்போது நன்றாக ஓடிக் கொண்டிருக்கும் மீட்டர்களை எல்லாம் குப்பையில் வீசியெறிந்துவிட்டு புதிதாக மாற்றுவதால் மீட்டர் தயாரிக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் தனியார் நெட் ஓர்க் நிறுவனத்திற்கும் தான் இலாபம், இது எல்லா மாநிலங்களிலும் உதய் திட்டத்தின் அடிப் படையில் மத்திய அரசாங்கத்தால் நிர்ப்பந்திக்கப் படுகிறது. 2021லேயே மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசமுழுவதும் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் அமலாக்க வேண்டும் என்று அறிவித்து அதை உள்ளடக்கிய மின்சார வினியோக சீர்திருத்தத் திட்டத்திற்கு ரூ30,590 கோடி ஒதுக்கினார். மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத மின்சாரச் சட்டத்தை எதிர்ப்பதாகச் சொல்லும் திராவிட மாடல் திமுக அரசாங்கம் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை ஏன் அமுலாக்குகிறது?

தென்னிந்தியாவிலேயே அதிக மீட்டர் இருப்பது தமிழ்நாட்டில்தான் (3.01கோடி). கேரளாவில் 1.32 கோடி. இவை எல்லாமே ஸ்மார்ட் மீட்டர்களாக மாற்றப்படுகின்றன. ஆந்திராவில் முதற்கட்டமாக 56.1 இலட்சம், கர்நாடகாவில் 22 ஆயிரம், தெலுங்கானாவில் 9 ஆயிரம் மீட்டர்கள் தற்போது பொருத்தப்பட உள்ளன. 2025க்குள் எல்லா மீட்டரும் மாற்றப்பட்டுவிடும். விவசாயத்திற்கான இலவச மின்சார மீட்டரும் மாற்றப்படும்.

### கட்டணம் செலுத்தாவிட்டால் ஸ்மார்ட் மீட்டர் தானாக மின் இணைப்பைத் துண்டித்துவிடும்

ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்பட்டுவிட்டால், செலுத்த வேண்டிய மின்கட்டணம் செல் ஃபோனுக்கு குறுந்தகவல் அனுப்பும். அந்த குறிப்பிட்ட நாளில் கட்டணம் செலுத்தாவிட்டால் தானாக இணைப்பைத் துண்டித்துவிடும். இதைப்பற்றி கேட்கும்போது, இரவு நேரத்தில் துண்டிக்க மாட்டோம் என்கிறார்கள். மேலும் தற்போது இருப்பதைப்போலவே, நுகர்விற்குப் பின்பு பணம் கட்டும் 'போஸ்ட் பெய்டு' திட்டம் தொடரும் என்கிறார்கள். பீஹார், உபி ஆகிய மாநிலங்களில் உள்ளதுபோல், 'பிரீபெய்டு' திட்டமும்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# தமிழக மின்வாரியத்தின் தொடர் அதிரடித் தாக்குதல்கள் . . .

# மக்களின் விழிப்புணர்வு கொண்ட நீடித்த தீவிரப் போராட்டமே மின்வாரியத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்

*4ம் பக்கத் தொடர்ச்சி*

அறிமுகப்படுத்தப்படலாம். அப்பொழுது கட்டிய பணம் தீர்ந்தபின் தானாக மின் இணைப்பு துண்டித்து விடும்.

ஸ்மார்ட் மீட்டரைப் பயன்படுத்துவது கட்டாயம் என்றபிறகு கிராமப்புற ஏழை எளிய மக்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றனர். பீஹாரில் கிராமப்புறங்களில் வயதானவர்கள் வாழும் வீடுகளுக்குச் சென்று முதியோர்களிடம் மின்வாரிய ஊழியர்கள் 'பிரீபெய்டு, ஸ்மார்ட் மீட்டர், ஆப் டவுன்லோடு, ஆன்டிராய்ட் ஸ்மார்ட் ஃபோன்' என்றெல்லாம் பேசினால் அவர்கள் ஒன்றை மட்டும் தான் புரிந்துகொள்கிறார்கள். 'இவர்கள் பியூஸ் பிடுங்க வந்துள்ளார்கள்'. நகர்ப்புற நடுத்தர மற்றும் மேல்தட்டு மக்களைப் போலவே எல்லா மக்களும் ஸ்மார்ட் ஆகிவிட்டார்களா என்ன? இவர்கள் எப்படி இணையதளத்தின் மூலம் பணம் செலுத்து வார்கள்? மேலும், நெட் ஒர்க் சிக்னல் எல்லா இடத்திலும் கிடைப்பதில்லை. இதனால் ஏற்படும் தகவல் பரிமாற்றக் கோளாறுகளாலும் மின் இணைப்பு துண்டிக்கப்படலாம்.

பீஹாரில் பிரீபெய்டு ஸ்மார்ட் மீட்டர்கள் அமலாக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஏப்ரல் 14 அன்று மட்டும் சுமார் 13000 வீடுகளுக்கு பவர் கட் ஆகிவிட்டது. ஏனென்றால், முன்கூட்டியே ரூ640 கட்டியவர்களுக்கும் திடீரென்று தகவல் தொழில்நுட்பக் கோளாரால் உங்கள் அக்கவுன்டில் மைனஸ் ரூ10,143 இருக்கிறது எனக் காட்டி நொடிப்பொழுதில் அத்தியாவசியத் தேவையான மின்சாரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. ஏப்ரல் 2021இல் உபியிலும் 6615 வீட்டு நுகர்வோர் எங்களுக்கு ஸ்மார்ட் மீட்டர் வேண்டாம் என எழுதிக் கொடுத்துவிட்டனர். காரணம், இவற்றை பொருத்துவதாகச் சொல்லி இணைப்பைத் துண்டித்துவிட்டு, பொருத்தப்பட்டபிறகு வேலை செய்ய வைப்பதற்கு காலதாமதம், தொழில்நுட்பச் சிக்கல்கள் என பல தொல்லைகளை நுகர்வோர் சந்தித்துள்ளனர். மீட்டர் கணக்கீட்டில் வெளிப் படைத்தன்மையில்லை, ஒருமாத கட்டணத்தை இப்போது ஒரே வாரத்தில் ஸ்மார்ட் மீட்டர் காட்டுகிறது என பல பிரச்சினைகளை முன்வைத்து ஏராளமானோர் இவ்வாண்டு ஜுன் மாதம் பீஹாரில் பிரச்சினையை எழுப்பினர். 'ஸ்மார்ட் மீட்டரை அகற்று, பழைய மீட்டரை பொருத்து' என்ற பதாகையில் மக்கள் இயக்கம் மாநில அளவிலான 'பந்த்'தை நடத்தியது. இதில் கலந்து கொண்ட அமைப்புகள் எல்லாம் பொதுவான, பீஹார் சிவில் சொசைட்டி, முசஃபர்பூர் ஆட்டோ ரிக்சா தொழிலாளிகள் சங்கம், ஓம் சேவாதள், வந்தே மாதரம், வாஹினி போன்றவையாகும்.

ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்பட்டபின் முன்பைவிட கட்டணம் பலமடங்கு அதிகரித்து விட்டதாக, அமெரிக்கா முதல் நைஜீரியாவரை பல நாடுகளில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டு வருகின்றன. இவை அனலாக் மீட்டரைப் போன்று காலத்தால் பரிசோதிக்கப்பட்டவை அல்ல. இதே குற்றச்சாட்டை நமது நாட்டிலும் பல்வேறு மாநிலங்களில் நுகர்வோர் கூறுகின்றனர். ஆனால் வேடிக்கையாக, ஸ்மார்ட் மீட்டரால் பொதுவாக செலவீனம் குறைந்து கட்டணம் 2.5% வரை குறையும் என யூனியன் மின்சாரத்துறை மந்திரி ஆர்கேசிங் அடித்துக் கூறுகிறார். (The Economic Times, Mrch 20,2023).

ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை செயல்படுத்தக் கூடாது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சிபிஐ(எம்)இன் மத்தியக் கமிட்டி கூறுகிறது. ஆனால் கேரளாவில் இத்திட்டத்தை கைவிட வில்லை என மின்துறை அமைச்சர் கிருஷ்ணன் குட்டி தெரிவித்துள்ளார். சிஐடியு தலைமை யிலான கேரளா மாநில மின்வாரிய தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் ஹரிலால், அதிக விலைக்கு ஸ்மார்ட் மீட்டர்களை தனியாரிடம் வாங்கக் கூடாது, பொதுத்துறை நிறுவனங்களின் மூலம் ஸ்மார்ட் மீட்டர் திட்டம் அமலாக்க வேண்டும் என்கிறார். திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று அவர் கூறவில்லை. தமிழ்நாட்டில் இத்திட்டத்தை எதிர்த்து சிபிஐ, சிபிஐ(எம்) அறிக்கை விட்டுள்ளனர். ஆனால் திட்டத்தை கைவிடும் வரையிலான தொடர் தீவிரப் போராட்டம் எதையும் அவர்கள் நடத்தவில்லை.

### மின் வினியோகத்தில் முழுமையாகத் தனியார்மயம்

மஹாரஷ்ட்ரா, உபி மற்றும் சில மாநிலங்களில் மின் வினியோகத்தை தனியாருக்கு பத்தாண்டு களுக்கு முன்னரே வழங்கி விட்டனர். மும்பையில் டாட்டா பவர், அதானி எலெக்ட்ரிசிடி ஆகியவை இருக்கின்றன. எங்கெல்லாம் கொழுத்த இலாபத்தை ஈட்ட முடியுமோ அங்கெல்லாம் தனியார் நுழை வதற்கான திட்டங்கள் முழுவீச்சில் நடைபெறு கின்றன. எப்படி பொதுத்துறை தொலைத் தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல்க்கு இணையாக ஏர்டெல், ஜியோ என தனியார் இருக்கின்றனரோ, அதேபோல் மாநில மின்வாரியத்திற்கு இணையாக ரிலையன்ஸ், அதானி குரூப் டாட்டா மின் இணைப்பு வழங்கும் நிறுவனங்கள் ஏற்கெனவே வந்துவிட்டன. ஜின்டால், டோரென்ட் போன்றவை வரிசையில் நிற்கின்றன. இவர்களின் கோரிக்கைதான் ஸ்மார்ட் மீட்டர்; அதற்கு மக்கள் பணத்திலேயே நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் மீட்டர்கள் அகற்றி குப்பையில் வீசப்படுகின்றன. தமிழ்நாட்டில் 30,000 கோடி என்றால் நாடு முழுவதும் சுமார் மூன்று இலட்சம் கோடிக்கு மேல் ஸ்மார்ட் மீட்டர்கள் மக்கள் வரிப்பணத்தில் வாங்கப்படுகின்றன. வாங்குவது மட்டுமின்றி, அவற்றை நிறுவு வதற்கான கட்டணத்தையும் நுகர்வோரிடமே வசூலிக்கின்றனர். இந்த ஸ்மார்ட் மீட்டர் விற்பவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பொரேட் நிறுவனங்களாகும்.

இதுமட்டுமல்ல; தேவையின்றி மின்மாற்றிகளை மாற்றுவது, அன்டர் கிரவுண்ட் கேபிள் மூலம் இருக்கும் ஓவர்ஹெட் லைனை எல்ல இடங்களிலும் மாற்றி வருவது போன்றவை மூலமும் மக்கள் பணம் தனியார் கம்பெனிகளுக்கு மடைமாற்றப்படுகின்றன. மேலும், மின்மாற்றி வாங்குவதற்கான டென்டர் கொடுத்ததில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மீது ரூ397கோடி ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததை இங்கு நினைவுகூற வேண்டும். அதேபோன்று, நிலக்கரி இறக்குமதியை கையாள்வதில் ரூ908 கோடி ஊழல் குற்றச்சாட்டில் டான்ஜெட்கோ உயர் அதிகாரிகளை இலஞ்ச ஒழிப்புத்துறை இயக்குனரகம் பதிவு செய்து விசாரித்து வருகிறது. சமீபத்தில் என்ஃபோர்ஸ்மென்ட் டைரக்ரேட் ரெய்டுகள் சில மின்வாரிய உயர் அதிகாரிகள் வீட்டில் நடக்கின்ற செய்திகள் வருகின்றன. ஆக, தனியார்மயத்தின் மூலம் முதலாளித்துவத்துடன் ஊழலும் வளர்ந்து வருகிறது.

### மக்கள் கருத்தைப் புறக்கணிக்கும் மாநில அரசாங்கங்கள்

ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைப் பற்றி தமிழக மின்வாரியம் மக்களிடம் கருத்து கேட்கவில்லை. அதேபோல மின்கட்டண உயர்வுக்கு முன் சென்ற ஆண்டே ஆகஸ்ட் மாதம் பெயரளவில் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது. ஏன் பெயரளவில் என்றால், எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் நடத்தாமல் சென்னை, கோவை, மதுரை நகரங்களில் மட்டும் அது நடத்தப்பட்டது. அந்த மூன்று நகரங்களிலும் ஒருசிலரைத் தவிர்த்து பெரும்பான்மையினர் கட்டண உயர்வை எதிர்த்து கருத்துத் தெரிவித்தனர். நஷ்டத்தை ஈடு செய்வதற்காக கட்டணம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கருத்தை அனைவரும் மறுத்தனர். மக்கள் தாங்கள் பயன்படுத்திய யூனிட்டிற்கு கட்டணம் செலுத்திவிட்டார்கள். பின் நஷ்டத்திற்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் பொறுப்பேற்க வேண்டும். ஊழல் குற்றவாளிகளைத் தண்டித்து முறைகேடுகளைக் களைய வேண்டும் என்று மக்கள் ஒருமித்தக் குரலில் ஒலித்தனர்.

அகில இந்திய மின்சார நுகர்வோர் சங்கமும் (AIECA) இக்கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்கேற்று கட்டண உயர்வை எதிர்த்தது. ஆனால் மக்கள் கருத்து புறக்கணிக்கப்பட்டு அரசாங்கம் நினைத்தபடியே கட்டணம் உயர்த்தப்பட்டது. அதேபோன்று, சென்ற ஆண்டு ஏப்ரலில் இந்த சங்கம் பல்வேறு கோரிக்கைகளுடன் ஸ்மார்ட் மீட்டர் வேண்டாம் என முழுங்கி பாராளுமன்றத்தை நோக்கிப் பேரணி நடத்தி மத்திய அரசாங்கத்திடம் மனு கொடுத்தது. ஆனால் எந்த பதிலும் இல்லை. நஷ்டத்தில் இருக்கும்போது மேலும் ஏன் இரண்டு இலட்சம் கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. இவ்விஷயத்தில் மக்களைச் சந்திக்கவே அரசாங்கங்கள் அஞ்சுகின்றன.

### வேலையிழப்புக்கு அடிகோலும் மின்வாரியத் திட்டங்கள்

ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதால் மதிப் பீட்டாளர்கள் வருவாய் மேற்பார்வையாளர்கள் மதிப்பீட்டு ஆய்வாளர்கள் உட்பட சுமார் 15000 தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் மட்டுமே வேலையிழக்கப்போகின்றனர். இவர்களின் வேலை உத்தரவாதத்திற்கான அறிவிப்பு எதுவும் இல்லை. ஓராண்டுகளுக்கு மேலாக கேங்மேன் வேலைக்கு தேர்வாகி காத்திருக்கும் இளைஞர் களுக்கு பணி நியமன ஆணை வழங்கவில்லை. பணி மூப்பெய்து ஓய்வு பெற்றவர்களின் காலி இடங்களை நிரப்பாமல் மூப்பெய்தியவர்களையே குறைந்த தொகுப்பூதியத்தில் மின்வாரியம் பணியமர்த்துகிறது. படிப்படியாக இவ்வாறு ஆட்குறைப்பை மின்வாரியம் செய்து வருகிறது.

அதுமட்டுமின்றி வணிக மற்றும் தொழில் அமைப்புகளுக்கான மின்கட்டண உயர்வின்மூலம், 2,70,000 விசைத்தறிகளில் பணியாற்றும் 5 இலட்சத்திற்கும் மேலான தொழிலாளர்கள் நலிவடைந்து இறுதியில் வேலையிழக்க வேண்டியுள்ளது. பல்வேறு சிறு குறு தொழில்கள் கொரோனா ஊரடங்கிற்குப் பிறகு எழுந்திருக்க யியலாமல் இருக்கும்போது கட்டண உயர்வாலும் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதால் ஏற்படும் அதிக கணக்கீட்டாலும் மேலும் நலிவடைந்து போகும். இவ்வாறாக, மக்களின் வாழ்வாதாரத்திற்கு உந்துசக்தியாக இருக்கும் அத்தியாவசியமான மின்சாரத்தை வியாபாரமாக்குவதன்மூலம் ஏகபோகங்கள் மக்கள் பணத்தைச் சுருட்டிச் செல்லவே தற்போதைய திட்டங்கள் வழிவகுக்கின்றன.

### மக்களின் விழிப்புணர்வு கொண்ட நீடித்த தீவிரப் போராட்டமே மின்வாரியத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்

சென்ற ஆண்டு புகுத்திய 52% கட்டண உயர்வு, மக்கள் வரிப்பணத்தை தேவையற்ற ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கு வீணாக்குதல், ஆட்குறைப்பு, போன்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் மாநிலம் முழுதும் மின் நுகர்வோர் மற்றும் பொது மக்கள் அணிதிரள வேண்டும். கோரிக்கைகள் நிறைவேறும் வரை இடைவிடாமல் போராடியே ஆக வேண்டும்.

மின்சாரச் சட்டங்களும் திட்டங்களும் நாடு முழுவதும் ஒரேமாதிரியாக போடப்பட்டு நடைமுறை படுத்தப்படுகின்றன. 22 மாநிலங்களில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படுகிறது. மின்சாரம் எல்லா இடங்களிலும் தனியார்மயமாகி வருகின்றது. ஆங்காங்கே மக்கள் அமைப்புகள், நுகர்வோர் சங்கங்கள் என பலர் போராட்டங் களில் குதிக்கின்றனர். இப் பின்னணியில் அகில இந்திய மின்சார நுகர்வோர் சங்கம் (AIECA) இவ்வமைப்புகளையும் பொதுமக்களையும் ஒரே மேடையில் திரட்டி மத்திய அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தை சென்ற ஆண்டுமுதல் துவக்கிவிட்டது. அப்போராட்டத்தில் எல்லா மக்களும் இணைந்து செயல்பட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறது ■

# தோழர் சிப்தாஸ் கோஷ் போதனைகளைப் பின்பற்றி இந்திய இளைஞர்கள் புரட்சிக்குத் தயாராகிவருகின்றனர் – நேபாள சகோதரப் பிரதிநிதிக் குழுவின் கருத்து

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளருமான தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு நிறைவுவிழா பொதுக்கூட்டத்தில் நேபாள இடதுசாரி பிரிதிநிதிகள் குழுவினரும் கலந்துகொண்டனர். அதிலிருந்த பிரதிநிதி தோழர் துளசிதாஸ் மகாராஜன் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:*

28 ஆண்டுகளுக்கு முன்பு எஸ்யுசிஐ கட்சியின் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக முதன்முறையாக நான் கொல்கத்தா வந்தேன். அப்போது இங்கே சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது, பல்வேறு குணாம்சங்களைக்கொண்ட ஒரு புரட்சிகரக் கட்சியாக எஸ்யுசிஐ இருப்பதை உணர்ந்தேன்.

இன்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்ததின நூற்றாண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக வந்துள்ள நேபாள பிரதிநிதிகள் குழுவின் ஒருவராக நான் கொல்கத்தா வந்துள்ளேன். கடந்த ஆகஸ்ட் 5ல் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டை கொல்கத்தாவில் உள்ள பிரிகேட் மைதானத்தில் சிறப்பு விழாவாக எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கொண்டாடியது. இந்தியாவின் 25 மாநிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கான தலைவர்கள், ஊழியர்கள், லட்சக்கணக்கான மக்களும் பங்கேற்றனர். பிரதான முதலாளித்துவ கட்சிகளோ, இடதுசாரிகள் என்று கூறும் கட்சிகளோகூட பிரிகேட் மைதானத்தில் அவ்வளவு எளிதாக கூட்டங்களை நடத்தத் துணிவதில்லை என்று இந்திய ஊடகங்கள் கூறுகின்றன. இந்த ஆண்டு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி நடத்திய இந்தக் கூட்டத்தில் பொதுமக்கள் பெருவாரியாக வருகை தந்ததைப் பார்த்து அனைவரும் வியக்கின்றனர்.

பிரிகேட் மைதானத்தில் ஆகஸ்ட் 5ஆம் தேதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெருவாரியாகக் கூடிய மக்கள் திரளைப் பார்க்கும்போது எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் தலைமையில் புரட்சியை நடத்துவதற்கு இந்திய மக்கள் தீர்மானகரமாக அணிவகுத்து வருகின்றனர் என்று தெரிகிறது. மார்க்சிசம், லெனினிசம், சிப்தாஸ் கோஷ் சிந்தனை காட்டிய வழியில் இந்தியாவில் சோசலிசப்புரட்சியை நடத்த முடியும் என்று அவர்கள் உறுதி பூண்டுள்ளனர். தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களுக்கு மரியாதை செய்வதற்காக சிறார் அமைப்பான கம்சோமோல் நடத்திய அணிவகுப்பு அனைவரையும் கவர்ந்தது. இது தோழர் சிப்தாஸ் கோஷ் காட்டிய வழியில் புரட்சியை நடத்தை இந்திய இளைஞர்கள் தயாராகிவிட்டதை எடுத்துக் காட்டுகிறது.

பிரிகேட் மைதானத்தில் நடைபெற்ற இந்த பிரம்மாண்டப் பொதுக்கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் சிறப்புரை ஆற்றினார். அவர் பெங்காலியில் உரையாற்றினார், சிறிது ஆங்கிலமும் கலந்திருந்தது. அவர் ஆங்கிலத்தில் பேசியதை நேபாளிலிருந்து வந்திருந்த நாங்கள் புரிந்து கொண்டோம். இருபதாம் நூற்றாண்டின் 40களில் எஸ்யுசிஐ கட்சியை உருவாக்குவதற்கு தோழர் சிப்தாஸ் கோஷ் எப்படியெல்லாம் கடினமாக பாடுபட்டார் என்பதை விரிவாக அவர் எடுத்துக் கூறினார். அதேபோல் இந்தியாவின் ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக எப்படி எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) திகழ்கிறது என்பதற்கான ஆதாரங்களையும் வழங்கினார்.

எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷை ஆகஸ்ட் 7 அன்று சந்திக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. எங்களுக்கு அது மிகவும் முக்கியமான சந்திப்பாகும். 88 வயதான தோழர் கோஷ் அவர்களின் உணர்ச்சி வேட்கை, துணிச்சல், நம்பிக்கையைப் பார்த்து நாங்கள் ஈர்க்கப்பட்டோம்.

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிக்கும் கொல்கத்தாவில் நாங்கள் தங்கியிருந்தபோது எங்களுக்கு உணவு, இருப்பிடம், இதர தேவையானவற்றை வழங்கி கவனித்துகொண்ட தோழர் தெபாஷிஸ் ராய் அவர்களுக்கும் ஸ்பெஷல் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். அதேபோல கொல்கத்தாவில் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து அதன் பல சிறப்பான பகுதிகளை பார்ப்பதற்கு உதவி செய்த தோழர் சந்திரநாத் தத்தா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் ■

# செப்டம்பர் 11, மகாகவி பாரதியாரின் 102வது நினைவுதினம்

**மகாகவி பாரதியின் நினைவுதினத்தை பல்வேறு மாவட்டங்களில் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO), அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS) இணைந்து பல்வேறு நிகழ்ச்சிகளை அனுசரித்தன**



சென்னை



நெய்வேலி



மதுரை

**அக்டோபர் 3, 2023 மத்திய தொழிற்சங்கங்களும் எஸ்கேஎம்மும் சேர்ந்து 2021ஆம் ஆண்டில் லக்கிம்பூர் கேரி விவசாயிகளின் படுகொலையை நினைவுகூறும் வகையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நாடு முழுவதும் நடத்தியது. தமிழ்நாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் ஏஐயுடியுசியும், ஏஐகேகேஎம்எஸ்ஸும் பங்கேற்பு**




விழுப்புரம்



புதுச்சேரி



திண்டுக்கல்

**சென்னை, சேலம், புதுக்கோட்டை மாவட்டங்களில் தொழிற்சங்கமும், விவசாய சங்கமும் பங்கேற்பு**

**புதுச்சேரி அரசாங்கம் மருத்துவ மாணவர் சேர்க்கையில் செய்துள்ள குளறுபடிகளை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்), எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கூட்டாக புதுச்சேரியில் நடத்திய ஆர்ப்பாட்டம்**





**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் மாசேதுங் அவர்களின் 47வது நினைவுதினம் சென்னையில் அனுசரிப்பு**

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

# ஏழை மக்கள் விரக்தி அடையாமல் தங்கள் சொந்த நலனுக்காக அரசியலைப் புரிந்து கொள்ள வேண்டும்

*3ம் பக்கத் தொடர்ச்சி*

ஆகியவை தீர்மானிக்கின்றன. தேர்தலில் போட்டியிடும் நம்மை பார்த்து மக்கள் பைத்தியமா என கேலியாகக் கேட்கின்றனர், 'உங்களுக்கு ஓட்டு வேண்டும் நிதி உதவியும் வேண்டுமா' என்கின்றனர். நாங்கள் பதிலுக்கு, 'ஆம் பைத்தியம் தான், நாங்கள் எங்கள் கட்சிச் செயல்பாடுகளை உடமையாளர்களின் பணத்தில், முதலாளிகளின் நிதியில் நடத்தவில்லை, நீங்கள் வழங்கும் நிதி உதவியைக் கொண்டு தான் நாங்கள் செயல்படுகிறோம். நாங்கள் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை' என தெளிவாகக் கூறுகிறோம்.

### இடதுசாரிவாதத்தை சிபிஐ(எம்) இழிவுபடுத்திவிட்டது

ஆக இரு வகை அரசியல் இருக்கின்றது. ஒரு அரசியல் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கின்றது மற்றொரு அரசியல் முதலாளித்துவத்தை தூக்கியெறியும் நோக்கம் கொண்டுள்ளது. முதலாளித்துவக் கட்சிகளான பாஜக காங்கிரஸ் மற்றும் பிராந்திய முதலாளித்துவ கட்சிகளான பல்வேறு கட்சிகள் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் அரசியலைச் செய்கின்றன.

எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் அரசியல் முதலாளித்துவத்தை அதிகாரத்திலிருந்து தூக்கி எறிந்து சோசலிசத்தை நிறுவி சமுதாயத்தை சுரண்டலிலிருந்து விடுவிக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. இப்பொழுது சிபிஐ(எம்) கட்சியும்கூட இடதுசாரி இயக்கத்தை கைவிட்டு விட்டு சில சீட்டுகளை பெறுவதற்காக முதலாளித்துவக் கட்சிகளின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறது. தற்போது சந்திப்பதை போன்ற சிக்கலை இந்தக் கட்சி முன்பு சந்தித்ததில்லை. ஒன்றாக இருந்த சிபிஐ கட்சி பாராளுமன்றத்தில் ஒரு காலத்தில் பெரிய எதிர்க் கட்சியாக இருந்தது. **1952**இல் கொல்கத்தாவில் பெரும்பான்மை சீட்டுகளை சிபிஐ வென்றது. **1966** வரை சிபிஐயும் சிபிஐ(எம்)மும் போர்க்குணம் உள்ள பல்வேறு மக்கள் போராட்டங்களை நடத்தின. **1967**இல் எப்பொழுது அதிகாரத்திற்கு வந்தார்களோ அப்பொழுது முதல் மாறிப்போய், மக்கள் போராட்டப் பாதையை கைவிடத் துவங்கினார்கள். மேற்கு வங்கத்தில் சிபிஐஎம் **34** வருடங்கள் ஆட்சி செய்தது. இந்த ஆட்சிக் காலத்தில் அவர்களது கட்சியின் வலிமை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் ஏன் அவர்கள் தங்கள் பலத்தை இழந்தார்கள்? இன்றைக்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக மனநிலை கொண்டிருக்கும் மக்கள் ஏன் சிபிஐ(எம்)ஐ ஒரு மாற்றாகப் பார்க்கவில்லை? இன்றைக்கு காங்கிரசுடனும் முஸ்லிம் மதத்தலைவர்களுடனும் கைகோர்க்காமல் சிபிஐ(எம்) ஆல் ஏன் இயங்க முடியவில்லை?

கட்சியை எந்த அளவிற்கு தங்கள் தலைவர்கள் கீழிறக்கி விட்டார்கள் என்பதை இக்கட்சியில் தொண்டர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மேற்கு வங்கத்தில் முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவை செய்வதற்காக மக்கள் இயக்கங்களை **34** வருடங்களாக இவர்கள் ஒடுக்கினார்கள். கட்சியின் மேலாதிக்கத்தை அனைத்து துறைகளிலும் திணித்து, எதிர்ப்பு குரலை ஒடுக்கி கட்சியின் நலனை உயர்த்த சமூக விரோதிகளைப் பயன்படுத்தினார்கள். இவ்வாறாக இடதுசாரி வாதத்தை இழிவு படுத்தினார்கள்.

விளைவாக, வலதுசாரி அரசியல் தற்போது மேற்கு வங்கத்தில் ஓங்கி வருகிறது. அதுவும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்து காங்கிரஸ் ஆட்சி வரை இடதுசாரி அரசியலில் வலிமையாக இருந்த மேற்குவங்க மாநிலத்தில் தற்போது பாஜக தனது தலையை தூக்க முடிகிறது என்றால் காரணம் சிபிஐ(எம்) இடதுசாரி வாதத்தின் புகழை மங்கச் செய்ததாலாகும். சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது எங்கு பார்த்தாலும், 'இப்போது ராம், பிறகு பாம் (இடது அரசியல்)' என்ற முழக்கத்தை எங்கும் கேட்க முடிந்தது. அதாவது முதலில் திரிணாமுல்லை அகற்ற பாஜகவை ஆதரிக்க வேண்டும் பிறகு இடதுசாரி அரசியலை பார்த்துக் கொள்வோம் என்று முழங்கினர். இந்த ஆணையை (சிபிஐ(எம்) தலைமை அலுவலகம் இருக்கும்) அலிமுதின் தெரு வழங்கியதா, நமக்கு தெரியாது ஆனால் மேற்கு வங்கத்தில் எங்கும் இதுதான் நடந்தது. இத்தகைய சந்தர்ப்பவாதத்தை யார் கற்றுக் கொடுத்தார்கள்? தேர்தல் ஆதாயத்திற்காக அரசியல் தந்திரோபாயம் என்ற பெயரில் சிபிஎம் தலைமை எந்த அளவிற்கு தாழ்ந்துவிட்டது என்பதை அதன் நேர்மையான தொண்டர்கள் சிந்திக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

### மதவெறி அலை மேலோங்க மேலோங்க, தார்மீகத் தரம் கீழோங்கி வீழ்ச்சியடைகிறது

முதலாளித்துவம் மனித இனத்தின் மென் உணர்வுகளை அழித்துவிட்டது, விழிப்புணர்வை அழித்துவிட்டது. நற்குணத்தை அழித்துவிட்டது. குடும்ப வாழ்க்கையில் அன்பையும் நேசத்தையும், பெற்றோர்களுக்கு பிள்ளை ஆற்ற வேண்டிய கடமை உணர்வையும், திருமண பந்தத்தில் பரஸ்பர அன்பையும் நம்பிக்கையையும் கொன்று விட்டது. சாராயம் போதை வஸ்துக்கள் பெருகுகின்றன. பாலியல் இச்சைக்கு அடிமையாகும் போதையும் அழிக்க முடியாத அளவிற்கு பெருகி விட்டது. எந்நேரமும் பாலியல் காமத்தில் மூழ்கிக் கிடப்பது, பாலியல் புத்தகங்களை, சினிமாக்களை இணையதள காட்சிப் படங்களையே பார்த்துக் கொண்டிருப்பது, பெண்களின் உடலைக் குறித்து அசிங்கமான கமெண்டுகளை அடிப்பது இவை எல்லாம் பாலியலுக்குப் போதை ஆவதாகும். மற்றொரு அடிமைத்தனம் நுகர்வு கலாச்சாரமாகும். சட்டை பையில் பணம் இல்லாவிட்டாலும் கையில் நவீன கைபேசி இருக்க வேண்டும். வீட்டில் உணவு இல்லை என்றாலும் வெளியில் சுற்றுவதற்கு ஆடம்பர ஆடை வேண்டும். இந்த நுகர்வு கலாச்சாரம் கிராமத்தில் உள்ள ஏழை மக்களையும் விட்டு வைக்கவில்லை. இந்தப் போதைகளை எல்லாம் முதலாளித்துவம்தான் கொண்டு வருகின்றது. ஏனெனில், இளைஞர்களிடமிருந்து மனிதத் தன்மையை, குணத்தை, மதிப்புகளை, மென் உணர்வுகளை அகற்றாவிட்டால் முதலாளித்துவம் அபாயத்திற்கு உள்ளாகிவிடும்.

பாலியல் வன்கொடுமைகள் அன்றாடச் செய்திகளாகிவிட்டன. மூன்று வயது குழந்தை ஆறு மாத பெண் சிசு முதல் நூறு வயது மூதாட்டி வரை வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். சென்ற மாதம் ஜூலை **28** அன்று கொல்கத்தாவில் அலிப்பூர் நீதிமன்றத்தில் தன் தாயை வன்புணர்வு செய்ததற்காக மகன் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது. என்ன அகோரம்! மனித சமுதாயத்தில் எப்படி இவ்வாறு நடக்கின்றது? மத கண்மூடித்தனமும் வெறித்தனமும் பேரலையாக உயரும் பொழுது, அதன் தொடர்ச்சியாக பெண்கள் மீதான வன்கொடுமையும் அதிகரிக்கின்றது. மனித சமுதாயத்தை முதலாளித்துவம் நரகத்தில் தள்ளுகின்றது. இராஜாராம் மோகன் ராய், வித்யாசாகர், ஜோதிராம் பூலே, விவேகானந்தர், தாகூர், சரச்சந்திரர், பிரேம்சந்த், நஸ்ரூல், சித்தரஞ்சன் தாஸ், திலகர், லாலா லஜ்பத்ராய், நேதாஜி, சுப்பிரமணிய பாரதி, ஜோதி பிரசாத், கோபபந்து தாஸ் மற்றும் எண்ணற்ற மாமனிதர்கள் எல்லாம் சுதந்திரத்திற்கு பிறகு இந்தியாவில் இப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை உருவாகும் என மிகக் கொடிய கனவிலும் கண்டிருக்க மாட்டார்கள்.

எனவே மக்களின் பிரதான எதிரி முதலாளித்துவம் ஆகும். நமது போர் முதலாளித்துவத்தை எதிர்த்து இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில், புரட்சியின் பதாகையை ஏந்தி நமது கட்சி மட்டுமே தனித்து நிற்கின்றது. நமது இலக்கு, முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதாகும். பாஜக தேர்தலில் தோல்வியடைந்தால் அது நல்லது தான். அதன் மூர்க்கத்தனம், இந்துத்துவா வெறி, யாரைப் பற்றியும் கவலைப் படாத மனப்பாங்கு இதனால் ஓரளவுக்குக் குறையும். ஆனால், இந்தியா கூட்டணி வெற்றி பெற்றாலும், மதவாதம் ஒழியாது. இக்கூட்டணியில் எந்த ஒரு கூட்டாளியும் மதச்சார்பற்ற கட்சி கிடையாது. மச்சார்பின்மை என்றால், நேதாஜியே கூறுகிறார்: "அரசியலுடன் மதத்திற்கு எந்த வேலையும் இல்லை. அறிவியல், பொருளாதாரம், அரசியல் தர்க்கம் ஆகியவற்றால் அரசியல் வழி நடத்தப்பட வேண்டும்". சரச்சந்திரரும் ரவீந்திரநாத் தாகூரும் இதையே கூறினர். மதச்சார்பின்மை என்றால் என்ன என்பதற்கு மேலும் வளர்ச்சி பெற்ற விரிவான விளக்கத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் வழங்கினார். மதச்சார்பின்மை என்றால் இந்தப் பொருள் உலகத்தை பொறுத்த விஷயங்கள், இந்த பூமியில் உள்ள விஷயங்கள் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியை அங்கீகரிக்காமை ஆகும் என்றார். இந்த, பொருள் உலகம் தான் நிஜத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மதச்சார்பற்ற மனிதத்துவமும் இந்த கோட்பாட்டின் அடிப்படையில் தான் உருவானது.

ஆக பாஜகவும், இந்தியா கூட்டணியும் இரண்டுமே மதச்சார்பற்றதும் அல்ல ஜனநாயகத் தன்மை கொண்டவையும் அல்ல. இவர்கள் அனைவருமே அம்பானி அதானி டாட்டா ஆகிய ஏகபோகங்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளன. அம்பானியும் அதானியும் பாஜகவிற்கு நூறு ரூபாய் கொடுத்தால் எதிர்க்கட்சிகளுக்கும் **30** அல்லது **40** ரூபாய் தேர்தல் பத்திரத்தின் மூலமாக கொடுப்பார்கள். மத்திய அரசாங்கத்தில் அதிகாரத்திற்கு இந்தியா கூட்டணி வந்தாலும் கூட, நாட்டில் அனைத்து பிரதான பிரச்சினைகளும் அப்படியே இருக்கும். ஏனெனில் அவர்கள் எல்லாம் முதலாளித்துவ அரசியலையே கடைபிடிக்கின்றன, முதலாளித்துவ ஆட்சியை நடைமுறைப்படுத்துகின்றன. இதற்கு மாற்று பாட்டாளிவர்க்க அரசியலும் பாட்டாளி வர்க்க ஆட்சியும் ஆகும். ஆக, தேவை பாட்டாளி வர்க்க மாற்று ஆகும். மக்கள் போராட்ட இயக்கங்களும் வர்க்கப் போராட்டங்களும் முதற்கண் அவசியமாகும்.

இதற்காகத்தான் இடதுசாரிகளின் ஒன்றுபட்ட முன்னணி நமக்கு தேவைப்படுகின்றது. போராட்ட இயக்கப் பாதைக்கு அவர்கள் திரும்பவேண்டும். வெறும் பாராளுமன்ற சீட்டுக்களுக்காக ஏதாவது ஒரு கட்சியுடன் நாங்கள் கூட்டுச்சேர விரும்பவில்லை. போராட்டத்திற்காகத்தான் எங்களுக்கு கூட்டணி தேவையாகும். இவ்வாறு மக்கள் இயக்கத்தின் உச்சத்தில் சிபிஐ(எம்) இருந்திருந்தால், டெல்லியில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விவசாயிகளின் போராட்டம் நாடு முழுவதும் பரவி இருக்கும். நாங்கள் எங்களது முழு சக்தியையும் கொண்டு அப்படிப் பரப்ப முயற்சித்தோம்.

நம்மையும் சேர்த்த ஆறு கட்சிகளைக் கொண்ட இடதுசாரி கூட்டணியை சிபிஐ(எம்) கட்சியும் அதன் கூட்டாளிகளும் எங்களிடம் சொல்லாமலேயே கலைத்தனர். ஏனெனில் அவர்கள் காங்கிரஸுடன் கூட்டு வைக்க முடிவு செய்தனர். மக்கள் போராட்டத்தை நடத்த அல்ல. இவ்வாறு போர்க்குணம் மிக்க விவசாயிகள் இயக்கத்தையும் மக்கள் போராட்டங்களையும் நாடு முழுவதும் தலைமை தாங்கி நடத்தும் வாய்ப்பு எப்படி வீணாக்கப்பட்டது என்பதை சிபிஐ(எம்) தொண்டர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்ப்பீர்களாக.

### ஏழை மக்கள் விரக்தி அடையாமல் தங்கள் சொந்த நலனுக்காக அரசியலைப் புரிந்து கொள்ள வேண்டும்

இந்த நாட்டில் எதுவும் நடக்காது, மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படாது போன்ற அவநம்பிக்கையான சிந்தனைகள் விரக்தியை அதிகரித்து அதன் மூலம் நெருக்கடியும் தொடரவே வழிவகுக்கும். எல்லா கட்சிகளும் ஒரே மாதிரி தான், நன்றாகப் பேசுவார்கள் பின்னால் மக்களை ஏமாற்றி விடுவார்கள் என்று நீங்கள் கூறும் போது எங்கள் கட்சிக்கு நீங்கள் நியாயம் வழங்கத் தவறுகிறீர்கள். நாங்கள் அவர்களைப் போன்றவர்கள் அல்ல. நாங்கள் மக்களை ஏமாற்றுவதில்லை பொய் பேசுவதும் இல்லை. திட்டவட்டமான கோட்பாடுகளுடனும் உயரிய லட்சியங்களுடனும் நாங்கள் மக்களிடையே செல்கின்றோம். அரசியலைப் புரிந்து கொள்ளுங்கள் என நாங்கள் மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். ஒவ்வொரு தேர்தலின் போதும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். இதைச் செய்வோம் அதை செய்வோம் என வானளாவ

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication: First week of Every Month

பாட்டாளி சிந்தனை
PAATTALI CHINTANAI

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

## தோழர் பிரவாஸ் கோஷ் உரை . . .

# இது உங்கள் கட்சி, வளர்த்தெடுப்பது உங்கள் பொறுப்பு

*7ம் பக்கத் தொடர்ச்சி*

*வாக்குறுதி கொடுக்கின்றனர். ஊடகங்களும் அவர்கள் பேச்சை ஒளிபரப்புகின்றன. நீங்களும் இந்தப் பேரலையில் அடித்துச் செல்லப்படுகின்றீர்கள்.*

*இத்தலைவர்கள் ஏமாற்றுவது உண்மைதான். ஆனால் நீங்கள் ஏன் உங்களை ஏமாற்றப்பட அனுமதிக்கிறீர்கள்? உங்களின் கண்களைத் திறந்து வைத்திருங்கள். அரசியலைப் புரிந்து கொள்ளுங்கள். 'எங்களுக்குக் குடும்பம் இருக்கின்றது, குழந்தைகளுடன் வாழ்கின்றோம், அரசியல் விவாதங்களில் நாங்கள் ஈடுபடுவதில்லை, அரசியலைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை' என்றெல்லாம் வழக்கமான பேச்சுக்களை பேசிக்கொண்டிருந்தால், நீங்கள் மீண்டும் மீண்டும் முட்டாளாக்கப் படுவீர்கள். சுதந்திரப் போராட்டத்தின் போதும் நீங்கள் முட்டாளாக்கப்பட்டீர்கள். டாட்டா பிர்லா வீட்டு குழந்தைகள் சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்தவில்லை. உயிரைத் தியாகம் செய்யவில்லை. சாதாரண மக்களின் குழந்தைகள்தான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு ரத்தம் சிந்தி மரணத்தை தழுவினர். ஆனால் ஆட்சி அதிகாரம் முதலாளித்துவ வர்க்கத்தின் கைகளுக்குச் சென்று விட்டது. அந்த காலத்தில் மக்கள் யார் சரி யார் தவறு, காந்தி வழியா நேதாஜி வழியா, எது சரி எனப் புரிந்துகொள்ள விரும்பவில்லை. அன்றும் கூட மக்கள், 'நாங்கள் சாதாரண மக்கள், பெரிய விஷயங்களில் தலையிட நாங்கள் விரும்பவில்லை, அவையெல்லாம் எங்களுக்கு புரியாது' என்று கூறினர். மேலும், காந்திஜி ஒரு அவதாரமாக ஒரு சன்னியாசி போன்று இருந்தார். ஆக, எது நடந்தே தீருமோ அது நடந்தது. இன்றும் இதே நிலை தொடர்ந்தால், இன்றும், 'நாங்கள் எளிமையான கல்வி அறிவில்லாத மக்கள், எங்களுக்கு அரசியல் புரியாது' என்று கூறிக் கொண்டிருந்தால், நீங்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுவீர்கள்.*

*அரசியல் உங்கள் வீட்டிற்குள் நுழைந்து விட்டது. உங்கள் வீட்டு உலையில் கஞ்சி வேகுமா, வீட்டில் விளக்கு எரியுமா, உங்கள் பிள்ளை கல்வி கற்க சந்தர்ப்பம் கிடைக்குமா, மருத்துவ சேவையை நீங்கள் பெறுவீர்களா, உங்களுக்கு வேலை கிடைக்குமா, கிடைத்தாலும் நிரந்தரமாக இருக்குமா, உங்களுக்கு உணவு கிடைக்குமா இவை அனைத்துமே அரசியலால் தீர்மானிக்கப்படுகின்றன. நீங்கள் அரசியலால் ஆளப்படுகின்றீர்கள். நீங்கள் ஒரு வேட்பாளருக்கு ஆதரவாக ஓட்டு போடும் பொழுது அதுவும் அரசியல்தான். அவர் ஜெயிப்பதற்கு நீங்கள் உதவுகிறீர்கள். இப்பொழுதும் நீங்கள் அரசியலைப் பற்றி சிந்திக்க விரும்பவில்லை என்றால் அது சரியல்ல. நீங்கள் உங்கள் மதிப்பீட்டை செய்ய வேண்டும், சிந்தனையை பயன்படுத்த வேண்டும், நீங்கள் கற்கவேண்டும். ஒரு கட்சி அதிகாரத்தில் இருந்து விலகி மற்றொரு கட்சி அதிகாரத்திற்கு வரும். 'இந்தக் கட்சியை அதிகாரத்தில் நாங்கள் பார்த்திருக்கிறோம் இதன் தவறான ஆட்சியை நாங்கள் அனுபவித்திருக் கிறோம் இம்முறை அந்தக் கட்சிக்கு வாய்ப்பளிப் போம்' என ஒவ்வொரு முறையும் நீங்கள் நீண்ட காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அடுத்த முறை நீங்கள் மூன்றாவதாக ஒரு கட்சிக்கு ஆதரவளிப்பீர்கள். இப்படியே நீங்கள் செய்து கொண்டிருந்தால் ஒரே வட்டத்தில் நீங்கள் சுற்றிக் கொண்டிருப்பீர்கள் உங்கள் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் எந்த விடிவும் கிடைக்காது.*

*ஆகஸ்ட் 15 சுதந்திர தினம் வரப் போகின்றது. தலைவர்கள் பெரிய சொற்பொழிவுகளை ஆற்றுவார்கள். நாட்டை வளர்ப்பதற்கு என்னவெல்லாம் செய்தார்கள் என பெரும் பட்டியலை வாசிப்பார்கள். ராஜ்பவன் ராஷ்டிரபதி பவன் பிரதமர் இல்லம் பாராளுமன்ற கட்டிடம் அனைத்தும் மின்விளக்கில் ஜொலிக்கும். ஸ்டார் ஹோட்டல்களில் சிறப்பு விருந்துகள் நடைபெறும். எஞ்சிய உணவுப் பண்டங்கள் குப்பையில் வீசப்படும். அவற்றை நகர்ப்புற வீதிகளில் பட்டினியில் திரியும் அனாதை குழந்தைகள் பொறுக்கித் தின்பார்கள். ஒவ்வொரு இரவில் கும்மிருட்டில் பட்டினியை தாங்க முடியாத தாய்மார்களும் சகோதரிகளும் தங்கள் கண்ணியத்தை விலைக்கு விற்றுக் கொண்டிருப்பார்கள். இந்தக் கொடூரமான முதலாளித்துவச் சுரண்டல், வேதனை மிக்க வேலையில்லாப் பிரச்சினை, பற்றி எரியும் விலைவாசி உயர்வு, அழிக்கப்படும் மனித மதிப்புகள் அதிகரித்து கொண்டு வரும் பாலியல் வன்கொடுமைகள், கும்பல் கற்பழிப்புகள், ஊழல், மந்திரிகளின் தலைவர்களின் வேடதாரித்தனம் இவை அனைத்தையும் நீங்கள் அனுமதிக்க போகிறீர்களா அல்லது தோழர் சிப்தாஸ் கோஷ் வழிகாட்டுதலில் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சிக்காகத் தயாராகப் போகிறீர்களா? முடிவு உங்கள் கையில்.*

### இது உங்கள் கட்சி, இதைப் பெரிதாக வளர்ப்பது உங்கள் பொறுப்பு

*எனவே நண்பர்களே தோழர்களே, எந்த நோக்கமும் இன்றி இந்தக் கட்சி தோற்றுவிக்கப்பட வில்லை. இந்தக் கட்சியை உருவாக்கி வளர்த்த வரலாறு, மார்க்சிசம் வெல்லற்கரியது என்பதை நிரூபிக்கின்றது. தோழர் சிப்தாஸ் கோஷை யார் உருவாக்கியது? மார்க்சிசம்தான் அவரை உருவாக்கியது. அதேபோல தோழர் சிப்தாஸ் கோஷும் மார்க்சிசம்–லெனினிசத்தை வளர்த்து செழுமைப்படுத்தினார். தற்போதைய தேவை மார்க்சியத்தைப் புரிந்து கொள்வதாகும். மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனையை கற்றுணர்ந்து புரிந்து கொண்டு தேர்ச்சிபெற வேண்டும். இதன் மூலம் மதிப்பு மிக்கப் புரட்சியாளர்களாக நாம் வரவேண்டும், அதன் மூலம், பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவரும் தன்னிகரற்ற மார்க்சிச தலைவருமான சிப்தாஸ் கோஷ் அவர்கள் தோற்றுவித்த இந்நாட்டின் ஒரே உண்மையான புரட்சிகர கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை வலுப்படுத்த வேண்டும். அதன் மூலம் வர்க்கப் போராட்டங்களையும் மக்கள் இயக்கங்களையும் வலுப்படுத்தி முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.*

*நாட்டின் தொலைதூரத்தில் இருந்தும் அகண்ட பிரதேசங்களில் இருந்தும் வந்திருக்கும் நீங்கள் இந்த கட்சியை வலுப்படுத்த வேண்டும் என உறுதி ஏற்க வேண்டும். நீங்கள் மிகுந்த வேட்கையுடனும் தீவிரத் இலக்குடனும் வந்திருக்கிறீர்கள். யாரெல்லாம் வயதானவர்களோ நீங்கள் உங்கள் வீட்டில் பிள்ளைகளின் ஒருவரையோ இருவரையோ எங்களுக்கு தாருங்கள். அவர்கள் சுட்டுக் கொல்லப்படலாம், தூக்கிலிடப்படலாம், ஆனால் அவர்கள் மனிதநேயக் கொடியை உயரப் பறக்கச் செய்வார்கள். இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது அறைகூவல் இதுதான்: உங்கள் தனிப்பட்ட நலன்களை விட்டு ஒழித்து, சமுதாயம் விரும்பும் புரட்சியை நடத்தும் பொறுப்பை சுமக்க நீங்கள் பெரும் எண்ணிக்கையில் முன்வர வேண்டும். எஞ்சிய மற்றவர்களுக்கு நான் கூறுகிறேன், எங்கள் கட்சி பெரியதாக வளர வேண்டும் என்று விருப்பத்தை மட்டுமே தெரிவிக்காதீர்கள். அப்படி நாங்கள் வளர உதவுங்கள், செயலூக்கத்துடன் ஒத்துழைப்பு தாருங்கள். எங்களுடைய கருத்துக்களை வீட்டுக்கு வீடு எடுத்துச் செல்லுங்கள். எங்களுக்காக எழுந்து நில்லுங்கள். உங்கள் முழு ஒத்துழைப்பையும் நான் கோருகிறேன்.*

*இறுதியாக நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்தக் கட்சியை பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும். இதன் பாதுகாவலனாக நீங்கள் எங்களை விமர்சிக்க வேண்டும் எங்களை கட்டுப்பாடுடன் வைத்திருக்க வேண்டும். எங்கள் கட்சியின் தொண்டரிடம் ஏதேனும் குறைகளைப் பார்த்தால் அதைக் களைய நீங்கள் உதவ வேண்டும். இவையெல்லாம் உங்கள் பொறுப்பு. இந்தக் கட்சி, தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களால் நிறுவப்பட்டது. இந்தக் கட்சி உங்களுக்கு, இந்நாட்டின் ஏழை மக்களுக்கு, சுரண்டப்படும் மக்களுக்குச் சொந்தமானது. நீங்கள் பிழைத்திருக்க வேண்டுமானால் இந்தக் கட்சி ஒன்றுதான் உங்கள் கையில் உள்ள ஆயுதமாகும். இக்கட்சியை பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும். இவற்றை கூறி எனது உரையை நான் முடித்துக் கொள்கிறேன்* ■

**தோழர் சிப்தாஸ் கோஷின் புகழ் ஓங்குக!**

**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஓங்கி வளர்க!**

**புரட்சி ஓங்குக!**




**பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட காவல்துறை சோதனையைக் கண்டித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி மேற்கு வங்கம் மாநிலம் கொல்கத்தாவில் நடத்திய பேரணி**

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**